வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu
ඊළනාඩු





மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை


Email : news@eelanadu.lk | மலர் : 04 | 14.09.2023 வியாழக்கிழமை | இதழ் : 278 | பக்கங்கள் : 12

# மோடியை ஒன்றாக சந்திக்க முயற்சிப்போம் வாருங்கள்!

## தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு விக்கி அழைப்பு



யாழ்ப்பாணம், செப்ரெம்பர்14

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை ஒன்றாகச் சென்று சந்திக்கும் முயற்சியை மேற்கொள்வோம் வாருங்கள். அவர் நிச்சயமாக எங்களை சந்திக்கச் சம்மதிப்பார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன் - இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களுக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். 11

### வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று கொடியேற்றம்

வடமராட்சி, செப். 14

வரலாற்று சிறப்புமிக்க வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 8.45 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறவுள்ள பெருந்திருவிழாவில் விசேட திருவிழாக்கள் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை வெண்ணை திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை துகில் திருவிழாவும் ஞாயிற்றுக் கிழமை பாம்பு 11



வரலாற்று பெருமைமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் தேர்த்திருவிழா நேற்று நடைபெற்றசமயம்... படம் – லி. ஜெகன்

# சுகாதார அமைச்சருக்கு மீண்டும் நெருக்கடிநிலை

## பதவி விலகுமாறு சத்தியாக்கிரகம்

கொழும்பு, செப். 14

சுகாதார அமைச்சர், செயலாளர் மற்றும் பணிப்பாளர் ஆகியோர் பதவி விலகுமாறு கோரி சத்தியாக்கிரக போராட்டமொன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

குறித்த சத்தியாக்கிரகப் போராட்டத்தை இலஞ்ச ஊழல் மற்றும் வீண் விரயத்துக்கு எதிரான சிவில் சமூக ஆர்வலர்கள் குழு ஒன்று நேற்று சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆரம்பித் துள்ளது. 11

# புதிய பயங்கரவாத சட்டம் விரைவில் வர்த்தமானியில்!

கொழும்பு, செப். 14

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் சர்வதேச அளவுகோல்களின்படி தயாரிக்கப்பட்ட புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் எதிர்வரும் சில தினங்களில் வர்த்தமானியில் வெளியிடப்படும் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இந்நாட்டு மக்களின் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் சமநிலையான சட்டமொன்றைக் கொண்டுவரும் நோக்கில் தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தப்பட்டதாகவும் அமைச்சர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதி 11

# ஜனாதிபதியின் வர்த்தமானியை புறக்கணித்த ரயில்வே சங்கங்கள்

கொழும்பு, செப். 14

ரயில் சேவை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ள போதிலும் இலங்கை ரயில் இயக்க பொறியியலாளர்கள் சங்கம் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் எஸ். ஆர்.சி.எம். சேனநாயக்க தெரிவித்தார்.

போக்குவரத்து அமைச்சரோ அல்லது வேறு யாரேனும் பேச்சுக்கு அழைக் கவில்லை. 11

# வவுனியா பல்கலை மாணவர் வரவேற்பு பதாதையில் தமிழ் மொழி புறக்கணிப்பு!

## சிங்கள மயமாவதாக குற்றச்சாட்டு

வவுனியா, செப். 14

வவுனியா பல்கலைக் கழகத்தின் மாணவர் வரவேற்பு பதாதையில் தமிழ் மொழி புறக்கணிக்கப் பட்டுள்ளது.

வவுனியா பல்கலைக் கழகத்தில் 2021 (22)ஆம் வருடத்தில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி வவுனியா பல்கலைக்கழகத் திற்கு தெரிவாகியுள்ள பிரயோக விஞ்ஞானபீட மாணவர்களை உள்வாங்கும் நடவடிக்கை வவுனியா பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் முதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.இந்நிலையில் குறித்த 11

### ரயில் விடாவிடில் வேலையில்லை!

#### எச்சரிக்கிறது அரசு

கொழும்பு, செப். 14

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள 84 ரயில் சாரதிகளை உடனடியாக பணிக்கு சமுகமளிக்குமாறு அறிவித்தல் விடுக் கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அறிவிப்பை 11

# ஆஸி. தூதுவராக பாக்லே

கொழும்பு, செப். 14

தற்போது இலங்கைக்கான இந்திய தூதுவராக உள்ள கோபால் பாக்லே, அவுஸ்திரேலியாவுக்கான அடுத்த இந்திய தூதுவராக நியமிக்கப் பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்பிரீத் வோஹ்ராவுக்குப் பிறகு அவுஸ்திரேலியாவுக்கான இந்திய தூதுவராக பாக்லே பதவியேற்பார்.

அவர் விரைவில் பணியை ஏற்பார் என எதிர்பார்க் கப்படுகிறது. 11

# கொக்குத்தொடுவாயில் 7ஆம் நாள் அகழ்வு 3 மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் மீட்பு!

முல்லைத்தீவு, செப். 14

கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியின் ஏழாவது நாள் அகழ்வாய்வுகள் நேற்றும் இடம்பெற்ற நிலையில், மூன்று மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன், விடுதலைப் புலிகளின் சயனைட் குப்பி ஒன்றும், இரண்டு இலக்கத் தகடுகளும் தடயப் பொருட்களாக எடுக்கப்பட்டன.

இந்நிலையில் ஏழு நாட்கள் அகழ்வாய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் இது வரை 9 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த வாரம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப் பட்டன.

இந் நிலையில் 11

### சனல் 4 பார்த்தால் உண்மை புரியும்

#### மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

கொழும்பு, செப். 14

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் உண்மையில் என்ன நடந்தது என்பதை சனல் 4 காணொலி மூலம் எவரும் புரிந்து கொள்ள முடியும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அப்போது சொன்னதற்கு மாறாக அது நடந்துள்ளது என்று அவர் கூறினார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக 4 வருடங்களாக அனைத்து தண்டனைகளும் 11

# இப்படியும் நடக்கிறது

வேடன் ஒருவன் காட்டில் வேட்டைக்குப் போயிருந்த போது முயல் ஒன்றைப் பிடித்தான்.

காட்டிலிருந்து முயலுடன் வந்துகொண்டிருந்தபோது, குதிரை வீரன் ஒருவன் வந்து விலை கேட்டான்.

வேடன் விலை சொல்வதற்கு முன்னதாகவே முயலைப் பிடுங்கிக் கொண்டு குதிரையில் ஓடினான்.

வேடன் பின்னால் ஓடினான். பிடிக்க முடியவில்லை.

கடைசியில் சத்தம் போட்டுச் சொன்னான், ‘ஏய் குதிரைக்காரா, என்னை ஏமாற்றிவிட்டு என் முயலை எடுத்துக் கொண்டு ஓடுவதாக நினைத்து விடாதே! நான் அதை உனக்கு பரிசாகக் கொடுத்து விட்டேன்!’ என்றான்.

குதிரைக்காரன் காதில் அது விழுந்ததோ இல்லையோ, வேடனுக்கு இப்போது சற்று ஆறுதல் கிடைத்தது.

லண்டனிலிருந்து நண்பர் ஒருவரிடமிருந்து ஒரு குறுந்தகவல் வந்திருந்தது. கடந்த ஆறாம் திகதி ஜெனிவாவில் ஐ. நா. மனித உரிமைகள் ஆணையர் வெளியிட்ட அறிக்கையுடன் அவரது சிறிய குறிப்பும் சேர்த்து.

முதல்முறையாக பதின்மூன்றைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை கவனித்தீர்களா என்று கேட்டிருந்தார் நண்பர்.

அதுதான் ஜனாதிபதி அதனை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறாரே என்று பதில் அனுப்பினேன். அவரிடமிருந்து பதில் வந்தது, ‘அதைத்தான் சொல்கிறேன். ரணில் தன்மீதான நம்பிக்கையை ஐ. நாவில் ஏற்படுத்தி விட்டார்.’ என்று.

ஆணையாளரின் அறிக்கையில், தமிழ் கட்சிகளுடன் தீர்வு தொடர்பாக பேசப்படுகிறது, காணி சுவீகரிப்பு நிறுத்தப்படும் என்று உத்தரவாதம் அளிக்கப் பட்டிருக்கின்றது. புலம்பெயர் மக்களை இணைத்துக்கொள்ள அலுவலகம் உள்ளது போன்ற விடயங்களை ஆணையாளர் தனது அறிக்கையில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

தமிழ் கட்சிகளுடன் தீர்வு குறித்து பேசப்படுகின்றது என்று அவர் திருப்திப்பட்டிருப்பதை நினைக்கின்றபோது ஐ. நா. அலுவலகம் எவ்வளவு தீவிரமாக எமது விடயங்களை கூர்ந்து கவனித்து வருகின்றது என்பதை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. அத னைப் படித்தபோது, தமிழ் தேசிய மக்கள் முன்னணியினர் ஞாபகத்துக்கு வருவதையும் தவிர்க்க முடியவில்லை. அவர்கள் தான் இலங்கை அரசுக்கு உதவி செய்வதற் காகவே தமிழ் கட்சிகள் பேச்சு என்ற நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்கின்றனர் என்று திரும்பத்திரும்ப சொல்லிக் கொண்டிருக்கின்றனர். அது சரியானதுதானோ என்று எண்ணாமல் இருக்கமுடியவில்லை. அடுத்த முக்கியமான விடயம், காணி சுவீகரிப்பு நிறுத்தப்படும் என்று அரசாங்கம் கொடுத்திருக்கும் உத்தரவாதத்தை ஐ. நா. மனித உரிமை ஆணையம் அப்படியே நம்பியிருக்கின்றது என்றால், அதற்குப் பின்னரும் காணிகள் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது அவர்களுக்கு தெரியவில்லையா? கடைசியாக தையிட்டியில் அமைக்கப்பட்ட விகாரையை- அது தனியாருக்கு சொந்தமானது என்பதைத் தெரிந்துகொண்டே கட்டப் பட்டது என்பதும், இந்த விகாரை அமைக்கப்பட்ட இடத்தில் ஒரு பௌத்தனும் இல்லை என்பதும் அவர்களுக்கு தெரியவில்லையா? அல்லது அது தொடர்பாக நமது தமிழ் கட்சிகள் நடத்துகின்ற போராட்டங்களின் தாக்கம் இவ்வளவுதானா?

மூன்றாவது முக்கிய விடயம், புலம்பெயர் மக்களை இணைத்துக்கொள்ள அலுவலகம் அமைக்கப்பட்டிருப்பது. அப்படியோர் அலுவலகம் எங்கே இருக்கின்றது என்பதையும் ஐ. நா. ஆணையாளர் அலுவலகமே இலங்கை அரசாங்கத்திடம் கேட்டு, தகவல் தந்தால் புலம்பெயர் மக்கள் அதனுடன் தொடர்பு கொள்ள ஏதுவாக இருக்கும்.

பதின் மூன்றை தொட்டும் பார்க்க முடியாது, அது நமது பிரச்னையின் தொடக்கப் புள்ளிகூட இல்லை என்றோம். ஆனால், பின்னர் பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்றோம். ஜனாதிபதி ரணில் பொலிஸ் அதிகாரத்தை தவிர்த்து தரலாம் என்றார். இல்லை இல்லை பொலிஸ் அதிகாரம் இல்லாமல் ஏற்றுக்கொள்ளமுடியாது என்றோம். பிறகு ஒன்றும் இல்லாவிட்டாலும் பரவாயில்லை, மாகாண சபைகளுக்கு தேர்தல்களையாவது வையுங்கள் என்றோம்.

சம்பந்தன் ஐயாவும், அரசாங்கம் தொடர்ந்து எங்களை ஏமாற்ற நினைத்தால் சர்வதேச சமூகம் பார்த்துக் கொண்டிருக்காது என்றார். சர்வதேச சமூகம் எந்த அளவுக்கு நமக்கு உதவும் என்பது இப்போது புரியத் தொடங்கியிருக்கிறது.

வேடன் குதிரைக்காரனிடம் முயலைப் பறிகொடுத்த பின்னர், அதனை நான் உனக்கு அன்பளிப்பாகத்தான் தந்தேனாக்கும் என்று திருப்திப்பட்டதுபோல, நாமும் பதின்மூன்றையும் பறிகொடுத்து விட்டு, சமஷ்டி வரும்தானே மாகாண சபை போனால் என்ன என்று திருப்திப்பட்டுக் கொள்வோம்.!

**- ஊர்க்குருவி.**













வரலாற்றுப் பிரசித்திபெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த தேர்த்திருவிழா நேற்று இடம்பெற்றபோது...
(படங்கள் : ஜெகன், ராகவ்)

ஈழநாடு
Eelanadu
14.09.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஆவணி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அரசியல் ஆய்வுகளின் தோல்வி?

அரசியல்வாதிகள் விடயங்களை சரியாக கையாளவில்லை. அரசியல்வாதிகளால் வெளிவிவகாரத்தை கையாள முடியவில்லை - அதற்கான வெளிவிவகாரக் கொள்கையொன்றை அவர்களால் வகுத்துக் கொள்ள முடியவில்லை. அரசியல்வாதிகளின் வினைத்திறனற்ற அணுகுமுறைகளால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் பின்னடைவை சந்தித்து வருகின்றனர் - தமிழ் சூழலில் முன்வைக்கப்படும் அரசியல் கருத்துருவாக்கங்களின் சாராம்சம் இவ்வாறுதான் அமைந்திருக்கும். கடந்த பதினான்கு வருட கால அரசியல் கருத்துருவாக்கங்கள் அனைத்தினதும் உள்ளடக்கத்தை மேற்கண்டவாறு நாம் உற்றுநோக்கலாம். யதார்த்தபூர்வமான அணுகுமுறையை முன்வைப்பவர்களும் இல்லாமலில்லை. அவர்களது வாதத்தை சரியென்று நிரூபிக்கக்கூடியவாறே சமகாலத்தின் அரசியல் காணப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், தமிழ்த் தேசியம் பேசும் அரசியல்வாதிகள் மட்டுமல்ல, அரசியல் கருத்துருவாக்கிகள் என்போரும் படுதோல்வியடைந்திருக்கின்றனர். அவர்களது எதிர்வுகூறலை காலம் பெறுமதியற்றதாக்கியிருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஊடான அழுத்தங்களால் பெரும் நன்மை விளையுமென்னும் கதைகளுக்கு இப்போது எந்தப் பெறுமதியும் இல்லை.

சர்வதேச அழுத்தங்களால் நன்மை விளையுமென்னும் கதையும் இப்போது ஒன்றுமில்லாமலாகிவிட்டது. மொத்தத்தில் கருத்துருவாக்கிகளின் அரசியல் எதிர்வுகூறல்களோ வெறும் கதைகளாக காணாமல் போய்விட்டன. தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலமோ தொடர்ந்தும் கீழ்நிலையை நோக்கியே சென்றுகொண்டிருக்கின்றது. 13ஆவது திருத்தச்சட்டத்தைக்கூட அமுல்படுத்துவதற்காக வெளியாரின் தலையீட்டை கோரும் நிலைக்கு தமிழர் அரசியல் கீழிறங்கியிருக்கின்றது.

இவர்கள் கூறியது போன்று சர்வதேச அழுத்தங்களால் கொழும்பு பாதிக்கப்பட்டிருந்தால் ரணில் விக்கிரமசிங்க 13ஆவது திருத்தத்திலும் குறைப்பு செய்வது தொடர்பில் பேசிக்கொண்டிருக்க மாட்டார். சர்வதேச அழுத்தங்களை எதிர்கொள்வதற்கான துருப்புச்சீட்டுகளை வெற்றிகரமாகக் கையாளும் திறனுடன் இலங்கை அரசு இருக்கின்றது. அரசு என்பதையும் அரசாங்கம் என்பதையும் போட்டுக் குழப்பிக்கொள்ளக் கூடாது.

இலங்கையில் தலையீடு செய்யும் பிரதான வெளித்தரப்புகள் அனைத்துமே இலங்கையின் பெரும்பான்மையான சிங்கள மக்களை கருத்தில் கொண்டே அவர்களது அரசியல் ஆட்டத்தை ஆடுகின்றனர் - தீர்மானங்களை எடுக்கின்றனர். இதில் தமிழ் மக்கள் ஒரு விடயமாகவே கருத்தில் கொள்ளப்படவில்லை. அவ்வாறு கருத்தில் கொள்ளப்பட்டிருந்தால் 13ஆவது திருத்தச் சட்டத்தைக்கூட அமுல்படுத்துவதற்கு இந்தளவு சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது. வெளித்தரப்புகளின் நலன்களுக்கு எதிராக கொழும்பு செயல்பட முற்பட்டால், கொழும்பின் குரல்வளையை பிடிப்பதற்கான உத்தியாகவே சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்படுகின்றது. இந்தியா, அமெரிக்கா, சீனா - மூன்று சக்திகளும், அவர்களுக்கான பிரத்தியேக ஆட்டத்தை ஆடிக்கொண்டிருக்கின்றனர். அதனை எப்போது, எந்த வடிவில் ஆட முடியுமோ அவ்வாறு ஆடுகின்றனர். இதில் அனைத்தும் இழந்து - இருப்பதை மேலும் இழந்துகொண்டிருக்கும் தமிழர்களோ வெறும் பார்வையாளர் நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர். தமிழ் மக்களை பார்வையாளர் நிலையிலிருந்து வெளியில் எடுக்கும் தந்திரோபாயம் எவரிடமும் இல்லை. அதற்கான ஆற்றலுள்ள தலைமையும் தமிழ் மக்களிடம் இல்லை. இவற்றை கருத்தில்கொள்ளாத ஆய்வுகளால் இனிப் பயனில்லை.

# சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஜீப் சிக்கியது!

*கொழும்பு, செப். 14*

*வரி செலுத்தப்படாமல் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட 8 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான அதிசொகுசு ஜீப் ஒன்றை ஊழல் ஒழிப்பு பிரிவு கைப்பற்றியது.*

*போலி ஆவணங்களை தயாரித்து விற்பனை செய்வதற்காக குருநாகலில் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இந்த ஜீப் கைப்பற்றப்பட்டது.*

*ஊழல் ஒழிப்பு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்த ஜீப் கைப்பற்றப்பட் டது.*

*2020ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இந்த ஜீப் வண்டியை கொழும்பு பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் போலி ஆவணங்களை சமர்ப்பித்து நாட்டுக்குள் கொண்டு வந்தார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மருத்துவர் ஜீப் வண்டியை விற்பனை செய்து தருமாறு குறித்த வர்த்தகருக்கு கோரிக்கை விடுத்ததாகவும் அதற்கமைவாக அவர் மற்றொரு வர்த்தகருக்கு விற்பனை செய்வதற்காக ஜீப் வண் டியை மறைத்து வைத்திருந் தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*மருத்துவர் போலி ஆவணங்களை தயாரித்து சுங்கத்திணைக்களத்தின் ஊழியர் ஒருவரின் உதவியுடன் வரி ஏய்ப்பு செய்து இந்தக் காரை நாட்டுக்குக் கொண்டு வந்துள்ளதாகவும் இது வேறு நபர்களின் பெயரில் போலியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.*

*இந்த வாகனம் தொடர்பான ஆவணங்களும், வருமான வரி செலுத்தியதாகக் கூறப்படும் ஆவணங்களும் போலியானவை எனப் பொலிஸார் தெரிவித்தனர். இதன்படி, இந்த சம்பவத்துடன் தொடர்பு டைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ஐ)*

# 2 கோடி ரூபா பெறுமதியான பீடி இலை புத்தளத்தில் மீட்பு!

*கொழும்பு, செப். 14*

*சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட இரண்டு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான 2,223 கிலோ பீடி இலைகள் புத்தளம் இலந்தடிய கடற்கரையில் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.*

*அதன்படி, வடமேற்கு கடற்படைக்கு சொந்தமான இலங்கை கடற்படை கப்பலான தம்பபன்னி , புத்தளம் இலந்தடிய கடற்கரைக்கு அருகில் நேற்று முன் தினம் இரவு நடத்திய விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 70 பொதிகளில் 2,223 கிலோ 100 கிராம் பீடி இலைகள் பொதி செய்யப்பட்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டன.*

*இந்த கடத்தல்களுக்குச் சொந்தமானது என சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.*

*மேலும் , கைப்பற்றப்பட்ட மோட்டார் சைக்கிள் நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டதுடன் கைப்பற்றப்பட்ட பீடிப் பொதிகள் மேலதிக சட்ட நடவடிக்கைகள் வரை கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (அ)*

## யாழ். இந்துவில் அருங்காட்சியகம் திறப்பு விழா

*யாழ்ப்பாணம், செப். 14*

*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட அருங்காட்சியகம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.*

*கல்லூரி வரலாற்றை பேசுகின்ற, வரலாற்று அடையாளமாகக் காணப்படுகின்ற பொருட்களின் சேமிப்பு இடமாக இது விளங்குவதோடு எதிர்கால சந்ததியினருக்கும் கல்லூரி பற்றிய கடந்த காலத்தை எடுத்தியம்பும் ஒரு வரலாற்றுப் பெட்டகமாகவும் இது திகழும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)*

## ஆயிரம் தாதியர்களை உடன் சேர்க்க நடவடிக்கை!


*கொழும்பு, செப். 14*

*தாதியர்கள் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆயிரம் தாதியர்களை உடனடியாக இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.*

*சுகாதார அமைச்சின் வளாகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது தற்போது சுமார் 3 ஆயிரம் பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன என்று தெரிவித்தார்.*

*துணை சேவையில் உள்ள தாதிகள் மற்றும் ஏனைய ஊழியர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் ரம்புக்வெல அமைச்சின் செயலாளர் எஸ்.ஜே.எஸ் சந்திரகுப்த மற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**செப்ரெம்பர் - 14 வியாழக்கிழமை**
**சோபகிருது வருடம் - ஆவணி 28**
**நல்ல நேரம் : 10.30 - 12.00**
**ராகு காலம் : 01.30 - 03.00**
**திதி : அமாவாசை**




**மேடம்**
புதிய முயற்சி யாவும் வெற்றி அடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளை பகிர்ந்து கொள்வீர்கள்.

**இடபம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயாருக்கு கை கால் வலி சோர்வு வந்து நீங்கும். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள்.

**மிதுனம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். பிள்ளைகள் உங்கள் சொல்படி நடப்பார்கள்.

**கடகம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலை முடியும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். உறவினர்களால் ஆதாயமும் உண்டு.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடைதாமதம் ஏற்படும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும்.

**கன்னி**
மறைமுக விமர்சனங்களும் தாழ்வு மனப்பான்மையும் வந்து செல்லும். உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். மனைவி மற்றும் நண்பர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

**துலாம்**
கடந்த கால இனிமையான அனுபவங்களை நினைவு கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். உங்கள் வீட்டு விசேஷங்களை நீங்களே முன்னின்று நடத்துவீர்கள்.

**விருட்சிகம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். அவசரத்திற்கு கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். அதிரடி மாற்றம் உண்டாகும்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். மற்றவர்களுக்கு உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சகோதரர்கள் வகையில் நன்மை உண்டு. கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். வாகனத்தை சரி செய்வீர்கள்.

**மீனம்**
குடும்பத்தினருடன் சுப விஷயங்களில் கலந்து கொள்வீர்கள். வெளி உணவுகளை தவிர்ப்பீர்கள். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். பழைய நண்பர் உங்களைச் சந்திக்கக்கூடும்.

# காவிரி நதி நீர் விவகாரத்தில் நீதிமன்றை நாடுவதே முடிவு!

## நீர் வளத்துறை அமைச்சர்

சென்னை, செப். 14

“காவிரி நதி நீர் விவகாரத்தில், உச்ச நீதிமன்றத்தை நாடுவதுதான் கடைசி முடிவு. இந்த வழக்கில் வரும் 21ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் என்ன முடிவு வருகிறது என்பதை பார்த்துவிட்டு, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டலாம். அதற்கு முன்பாகவே அந்தக் கூட்டத்தை கூட்ட வேண்டிய தேவை இல்லை” என்று தமிழக நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

சென்னையில் தமிழக நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு,

”காவிரி ஒழுங்காற்று குழுக் கூட்டத்தில், 15 நாட்களுக்கு 5,000 கனஅடி தண்ணீரை, தமிழகத்துக்கு திறந்து விட வேண்டும் என்று ஒரு முடிவெடுக்கப்பட்டது. இது குறித்து கர்நாடக அரசுக்கும் தெரிவிக்கப்பட்டது. எனவே, கர்நாடக அரசு என்ன முடிவெடுக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும்.

கர்நாடக அரசு தமிழக அரசுக்கு என்ன பதில் சொல்கிறார்கள் என்பதை விட, காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி ஒழுங்காற்றுக் குழுவுக்கு என்ன பதில் சொல்கின்றனர் என்பதை பார்க்க வேண்டும். அவர்களது பதிலை பார்த்த பின்னர், எங்களுக்கு இருக்கும் கடைசி முடிவு, உச்ச நீதிமன்றத்தை நாடுவதுதான். உச்ச நீதிமன்றத்தில், வரும் 21ஆம் திகதி காவிரி நீர் பங்கீடு தொடர்பான வழக்கு விசாரணைக்கு வருகிறது. அதற்கு முன்பாக, கர்நாடக அரசின் முடிவு தெளிவாக தெரிந்து விடும். அந்த முடிவையும் வழக்கில் இணைத்து தமிழக அரசு சார்பில் வாதிடப்படும்” என்றார்.

கர்நாடக அணைகளில் போதுமான தண்ணீர் இல்லை, மழைப்பொழிவு இல்லை என்று கூறப்படுகிறது. மத்திய அரசுடன் இணைந்து தமிழக அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்படுமா என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், ”நிச்சயமாக கோரிக்கை வைக்கப்படும். இன்னும் சொல்ல வேண்டும் என்றால், உச்ச நீதிமன்றமே ஒரு குழுவை நியமித்து, கர்நாடக அணைகளில் போதுமான தண்ணீர் உள்ளதா என்பது குறித்து ஆய்வு செய்வதற்கு ஆணையிடலாம்” என்று அவர் கூறினார். (ஐ)

# இந்தியாவை காப்பாற்ற வேண்டுமானால் ‘இந்தியா’ கூட்டணி வெற்றி பெறவேண்டும்

## முதலமைச்சர் மு. க. ஸ்டாலின்

சென்னை, செப். 14

“இந்தியாவை காப்பாற்றியாக வேண்டும் என்று சொன்னால், “இந்தியா“ கூட்டணி வெற்றி பெற்றாக வேண்டும்” என்று தமிழக முதல்வரும் தி. மு. க. தலைவருமான மு. க. ஸ்டாலின் பேசினார்.

சென்னையில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றிலேயே முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், “தி. மு. கவை பொறுத்தவரைக்கும், ஆட்சியில் இருந்தாலும் சரி, ஆட்சியில் இல்லையென்று சொன்னாலும் சரி, மக்களை பற்றி சிந்திக்கின்ற, மக்களைப் பற்றி கவலைப்படுகிற ஒரு கட்சிதான் தி. மு. க. அதனால்தான் தொடர்ந்து வெற்றியை நாம் இன்றைக்கு பெற்று வருகிறோம்.

பாராளுமன்றத் தேர்தலில் ஒரு மிகப் பெரிய வெற்றி தமிழக மக்கள் நமக்கு தேடித் தந்தார்கள். அதற்கு பின்னால் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலில் ஆறாவது முறையாக தி. மு. க. ஆட்சி உருவாக்கித் தருவதற்கு மக்கள் சிறப்பான ஆதரவை தந்தார்கள். ஆட்சிக்கு வந்த பிறகு, உள்ளாட்சி தேர்தல் நடந்தது. அந்த உள்ளாட்சி தேர்தலில் மிகப் பெரிய வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம். அதற்குப் பிறகு நடைபெற்றிருக்கக் கூடிய இடைத் தேர்தல்கள், அந்த இடைத் தேர்தலிலும் மிகப் பெரிய வெற்றியை நாம் பெற்றிருக்கிறோம்.

தொடர்ந்து வெற்றியை பெறுவதற்கு காரணம் என்னவென்று கேட்டீர்கள் என்றால், நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு - நாம் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன திட்டங்களை, என்னென்ன பணிகளை மக்களுக்கு செய்யப் போகிறோம் என்று வாக்குறுதிகளை, உறுதிமொழிகளை தந்தோம். அந்த அடிப்படையில் அதை நம்பி தமிழக மக்கள் நமக்கு ஆதரவு தந்தார்கள். வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்த பிறகு அப்படிப்பட்ட உறுதிமொழிகளை, வாக்குறுதிகளை இன்றைக்கு படிப்படியாக நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம்.

மக்கள் தயாராக இருக்கிறார்கள். ஏற்கெனவே “இந்தியா” கூட்டணி அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது. பீஹாரில் முதல் கூட்டத்தை நடத்தி, இரண்டாவதாக கர்நாடகாவில் நடத்தி, மூன்றாவதாக மும்பையில் நடத்தி, அந்தக் கூட்டத்தின் மூலமாக பல்வேறு முடிவுகள் எல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி அமைக்கப்பட்டிருக்கக் கூடிய “இந்தியா” கூட்டணி வெற்றி பெற்றால்தான் இந்தியாவை நாம் காப்பாற்ற முடியும். இந்தியாவை காப்பாற்றியாக வேண்டும் என்று சொன்னால், இந்தியா கூட்டணி வெற்றி பெற்றாக வேண்டும் - என்றார். (ஐ)

# ஏ. ஆர். ரஹ்மானை மத ரீதியாக சுருக்குவதும் தாக்குவதும் அபத்தம்!

சென்னை, செப். 14

‘மறக்குமா நெஞ்சம்’ இசை நிகழ்ச்சி ஒருங்கிணைப்புக் குளறுபடி விவகாரத்தில் ஏ. ஆர். ரஹ்மானை மத ரீதியாக சுருக்குவதும் தாக்குவதுமான செயல்பாடுகள் அற்பத்தனமான இழிசெயலாகும்”, என்று நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“உலக புகழ்பெற்ற இசையமைப்பாளர் ஏ. ஆர். ரஹ்மானின் ‘மறக்குமா நெஞ்சம்’ என்னும் இசை நிகழ்ச்சி விழாவில் ஏற்பட்டக் குளறுபடிகளும் சிரமங்களும் வருத்தத்திற்குரியது. இடங்களை ஒதுக்கீடு செய்வதில் ஏற்பட்ட குழப்பங்களாலும் போக்குவரத்து நெரிசலில் சிக்குண்டதால் நேர்ந்த பாதிப்புகளாலும் பொதுமக்கள் வெளிப்படுத்திய உள்ளக்குமுறல் மிக நியாயமானது.

அதனை உணர்ந்தே ஏ.ஆர்.ரஹ்மான் தார்மீக அடிப்படையில், நடந்த தவறுகளுக்குத் தானே பொறுப்பேற்றுக் கொள்வதாகக் கூறி வருந்தியிருக்கிறார். மேலும், இந்நிகழ்ச்சியை சரிவர காண இயலாது பாதிக்கப்பட்டதாக தெரிவித்தப் பார்வையாளர்களுக்கு அவர்களுக்குரிய நுழைவுச்சீட்டுக் கட்டணத்தைத் திருப்பித் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளது சகோதரர் ஏ.ஆர்.ரஹ்மானின் உளநேர்மையை வெளிப்படுத்துகிறது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடும் ஒரு பொது நிகழ்ச்சி குறித்தானத் திட்டமிடலையும், ஒழுங்கமைவையும் ஆழமாகக் கண்காணித்து, அதனை நெறிப்படுத்த வேண்டியது அரசின் பொறுப்பும், கடமையுமாகும். ஏற்பாட்டாளர்கள் தவறு செய்யும்பட்சத்தில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசுக்கு முழு உரிமையுண்டு.

பன்னாட்டரங்கில் உலகப்புகழ் பெற்ற ஒஸ்கர் விருதுகளை வாரிக்குவித்து, தாய்மொழி மீது கொண்ட அளப்பெரும் பற்றினால் தமிழிலேயே அம்மேடையில் பேசி, தமிழுக்கும், தமிழர்களுக்கும் பெருமை சேர்த்திட்ட இசைத்தமிழன் ஏ.ஆர். ரஹ்மான் மீதானத் தனிப்பட்டத் தாக்குதல் ஒரு போதும் ஏற்புடையதல்ல. தமிழ்ப் பேரினத்தின் ஒப்பற்ற கலை அடையாளங்களுள் ஒருவராகத் திகழும் ஏ.ஆர்.ரஹ்மான் தமிழர்களின் பெருமிதத்திற்குரியப் பேராளுமையாவார் - என்றார்.

# போர் முடிந்த கையோடு சம்பந்தனை மகிந்த சிறை வைத்திருக்கவேண்டும்!

## மொட்டு கட்சி எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, செப். 14

**"சம்பந்தன் புலிகளுடன் கைகோர்த்திருந்தார், போர் முடிவடைந்தவுடன் அவரை சிறையில் அடைத்திருக்க வேண்டும், ஆனால் மகிந்த ராஜபக்ஷ அவ்வாறு செய்யவில்லை." _ என்று பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினரான காமினி லொக்குகே தெரிவித்தார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் என சனல் 4 ஆவணப்படத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சந்தேகநபர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும். அவர்கள் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கருத்து வெளியிட்டிருந்தார்.

மொட்டு கட்சியின் ஊடக சந்திப்பு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது சம்பந்தனின் கூற்று தொடர்பில் கருத்து வெளியிட்ட காமினி லொக்குகே,

"சனல் - 4 பற்றியே இன்று அதிகம் கதைக்கப்படுகின்றது, குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அனைவரும் கைது செய்யப்பட வேண்டும் என சம்பந்தனும் கருத்து வெளியிட்டுள்ளார், போர் முடிவடைந்த பின்னர் தாங்கள் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதை சம்பந்தன் மறந்துவிட்டார் போலும், ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காக அவர்கள் தொடர்பில் அப்போது ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

புலிகளுடன் இவர்கள் (சம்பந்தன்) கைகோர்த்திருந்தனர். ஆனால் அவர்களின் தலைவரான அமிர்தலிங்கத்தையும் புலிகள் கொலை செய்தனர்.

சனல்-4 என்பது எமது நாட்டுக்கு எதிராக போலியான தகவல்களை வெளியிடும் நிறுவனம், எனவே, சர்வதேச விசாரணை அல்ல எந்த விசாரணையையது நடத்தட்டும். பௌத்த தலைவரை ஜனாதிபதியாக்குவதற்கு முஸ்லிம் இளைஞர்கள் தற்கொலை செய்துகொள்வார்களா என்ன? ராஜபக்ஷக்கள் தொடர்பில் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை ஏற்படுத்தவே இப்படியான நடவடிக்கை இடம்பெறுகின்றது."-என்றார் காமினி லொக்குகே. (அ)

# ரணில் ஜனாதிபதி - சஜித் பிரதமர் யோசனைக்கு ஹரினும் ஆதரவு

கொழும்பு, செப். 14

"ரணிலும், சஜித்தும் இணைந்து செயற்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பு. அந்தவகையில் 'ரணில் ஜனாதிபதி, சஜித் பிரதமர்' என்ற யோசனையை ஆதரிக்கின்றேன்."-என்று அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ரணிலும், சஜித்தும் காலைவாரிக்கொள்ளாமல் இணைந்து செயற்படுவதையே நானும் விரும்புகின்றேன். இவர்களை இணைப்பதற்காகத்தான் 2014 இல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட்டு, ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டேன். சஜித், ரணில் ஒரு மேடையில் ஏறவேண்டும் என்பதே ஒரே நிபந்தனையாக இருந்தது. இதன்படி இருவரும் இணைந்தனர். ஒன்றாக மேடையேறினர். அதன் பின்னரே அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

2019 இல் சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக்குவதற்கு பெரும்பாடுபட்டவன் நான். எனவே, இவர்கள் இணைந்து செயற்பட்டால் நல்லது.

அதேவேளை, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரம சிங்க கட்சி வேட்பாளராக அல்லாமல், பொது வேலைத் திட்டத்துடனேயே வருவார்-என்றார். (அ)

# 2015 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் 19 வீதத்தை இலங்கை நிறைவேற்றியுள்ளது

## வெரிடே ரிசேர்ச் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 14

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 30/1 இல் உள்ள நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான கடப்பாடுகளை நிறைவேற்றுவதில் இலங்கை அரசாங்கத்தின் முன்னேற்றம் குறித்து வெரிடே ரிசேர்ச் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

தீர்மானத்தின் 30/1 இன் கீழ் அமுல்படுத்துவதாக உறுதியளிக்கப்பட்ட நடவடிக்கைகளில் 19.4 விகிதமானவற்றையே இலங்கை நிறைவு செய்துள்ளதாகவும், எட்டு வருடங்களாக இலங்கையின் இணை அனுசரணையுடன் வழங்கப்பட்ட தீர்மானத்தின் 61.1 வீத உறுதிப்பாடுகள் மோசமான முன்னேற்றத்தைக் கண்டுள்ளன என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

இந்த தீர்மானம் உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி, நிலைமாறுகால நீதி மற்றும் நல்லிணக்கம், பாதுகாப்பு மற்றும் இராணுவ மயமாக்கல், சர்வதேச ஈடுபாடு, மற்றும் அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விடயங்களை உள்ளடக்கியுள்ளது.

இருப்பினும் நீதி செயல்முறை, காணாமல் போனவர்கள் பற்றிய அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகத்தை நிறுவுதல், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களில் இருந்து அனைத்து நபர்களையும் பாதுகாப்பதற்கான சர்வதேச மாநாட்டில் கையெழுத்திட்டு உறுதிப்படுத்துதல், வலிந்து காணாமல்போதல்களை குற்றமாக்குதல், இலங்கை அரசாங்கத்திற்கும் ஐ.ந.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துடனான ஈடுபாடு என்பனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

முந்தைய ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் காணாமல்போனவர்களின் குடும்பங்களுக்கு மரணச் சான்றிதழ்களை வழங்குதல் உள்ளிட்ட ஏழு உறுதிமொழிகள் ஓரளவு நிறைவேற்றப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் பொதுமக்களின் வாழ்க்கையை இயல்புநிலைக்கு மீட்டமைத்தல், ஊடகவியலாளர்கள், மனித உரிமைகள் ஆய்வாளர்கள், மத சிறுபான்மையினர் மற்றும் சிவில் சமூகத்தின் மீதான தாக்குதல்களை விசாரிக்கவும், இந்தத் தாக்குதல்களின் குற்றவாளிகளை தண்டிப்பது மற்றும் எதிர்காலத்தில் இதுபோன்ற தாக்குதல்களைத் தடுக்கும் நடவடிக்கைகள் மோசமான முன்னேற்றத்தில் இருப்பதாக கூறியுள்ளது.

மனித உரிமைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்ட மீறல்களை விசாரிப்பதற்கு, சிறப்பு ஆலோசகர் மற்றும் வெளிநாட்டு பங்கேற்புடன் நீதித்துறை பொறிமுறையை அமைப்பதற்கான உறுதிமொழிகளில் எந்த முன்னேற்றமும் இல்லை என வெரிடே ரிசேர்ச் நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது. (அ)

# ரயில் நிலையங்களுக்கு இராணுவப் பாதுகாப்பு!

கொழும்பு, செப். 14

ரயில் ஊழியர்களின் பாதுகாப்பு கருதி கொழும்பு கோட்டை மற்றும் மருதானை ரயில் நிலையங்களில் இராணுவத்தினரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப் படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று முன் தினம் மாலை அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இதற்கமைய பயணிகள் ரயில் சேவை, பொருள் விநியோகம் ஆகிய சேவைகள் ரயில் திணைக்களத்தினாலும் அதனுடன் இணைந்த சேவைத் துறையினராலும் தடையின்றி, பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

சம்பள உயர்வு, பதவி உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து ரயில் சாரதிகள் சங்கத்தினர் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு முதல் மேற்கொண்ட பணிப்புறக் கணிப்புப் போராட்டத்தால் நேற்று முன் தினம் பயணிகள் ரயில் சேவை பாரிய நெருக்கடிக்கு உள்ளாக்கியது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாகப் பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். (அ)

# கட்சிக்கு மக்கள் படையை திரட்டுகின்றது சஜித் அணி

## மாத்தறையில் இருந்து நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, செப். 14

"கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் புதிய வேலைத் திட்டதை ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் மாத்தறையிலிருந்து ஆரம்பிக்கவுள்ளது." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

"நாட்டின் இன்று சகல துறைகளும் சரிந்துபோயுள்ளன.பொருளாதாரம் வீழ்ச்சி கண்டு நாட்டின் பெருன்பான்மையினர் பட்டினியில் இருக்கின்றனர். மக்கள் வாழ்வதற்கான போராட்டதை முன்னெடுத்துள்ளனர்.

சுகாதாரத்துறை முற்றிலுமாக சரிந்துவிட்டது.இதற்கான காரணங்களை நாம் பாராளுமன்றத்தில் முன்வைத்தோம். நாட்டு மக்கள் இன்று புதிய ஆட்சியையே எதிர்பார்க்கின்றனர்.நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் சூழ்ச்சியால் ஆட்சிக்கு வந்தமை இன்று சர்வதேசத்திற்கு கொண்டு செல்லப்பட்டு வெளிச்சத்திற்கு வந்துள்ளது. கடந்த அரசாங்கம் சதிப்புரட்சி மூலம் ஆட்சிக்கு வந்ததாக சர்வதேச அமைப்புகள் கூறுகின்றன. சூழ்ச்சியினாலையே கடந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததாக சர்வதேசம் இன்று கூறுகின்றது.நாட்டின் புலனாய்வு பிரதானிக்கு முறைபாடுகள் குற்றங்கள் எழுந்துள்ளன.

எனவே நாட்டிற்கு புதிய ஆட்சி தேவை, நாட்டிற்கு பொறுப்பான நிர்வாகம் தேவை. இந்த ஆட்சியை பொறுப்பேற்க சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி தயாராகவுள்ளது. ஏனைய கட்சிகள் தேர்தல் தொகுதிக் கூட்டங்களை நடத்த ஆரம்பித்துள்ளது மாத்திரமே.நாம் நாட்டின் சகல தேர்தல் தொகுதிகளிலும் தொகுதிக் கூட்டங் களை நடத்தி முடித்துவிட்டோம். கட்சிக்கு புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் புதிய வேலைத் திட்டதினையும் கிராமத்திற்கு கிராமம் செல்லும் புதிய வேலைத்திட்டத்தினையும் ஐக்கிய மக்கள் சக்தி எதிர்வரும் 16 ஆம் மற்றும் 17 ஆம் திகதிகளில் மாத்தறையிலிருந்து ஆரம்பிக்கவுள்ளோம்.

அன்றைய தினங்களில் சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைப்பாளர்களும் மாவட்டத்திற்குச் சென்று புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளல், வாக்காளர் பிரிவு கிளைகள்,மகளிர் பிரிவுகள்,இளைஞர் பிரவுகள்,பிக்குகள் முன்னணியின் பிரிவுகளை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகளை அன்றைய தினம் ஆரம்பிக்கவுள்ளோம்.அடுத்த அடுத்த மாதங்களில் இந்த வேலைத்திட்டத்தை சகல மாவட்டங்களிலும் நடைமுறைப் படுத்துவோம்.

நாங்கள் வெற்றியை தனதாக்குவது இவ்வாறே. நாட்டை கட்டியெழுப்புவதே ஐக்கிய மக்கள் சக்தியின் குறிக்கோள்.அந்த இலக்கை வெல்வதற்கான பிரசாரம் செப்ரெம்பர் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் மாத்தறை மாவட்டத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும். நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழலுக்கு முகங்கொடுக்கக் கூடிய எந்தவொரு தரப்பும் ஆளும் தரப்பில் இல்லை. பொதுஜன பெரமுனவிற்கு கிராமத்திற்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி குறித்து பேசுவதில் அர்த்தமில்லை. மக்கள் விடுதலை முன் னணியின் பயங்கரமான பொருளாதாரக் கொள்கையைப் பற்றி நினைக்கும் போதே அவர்களுக்கு ஒரு வாக்கு கூட கிடைக்காது.

மகளிர் சக்தி,இளைஞர் சக்தி,கிளைச் சங்கம் மட்டுமின்றி,பிக்குகள் ஆலோசனை சபை,சர்வமதத் தலைவர்கள் ஆலோசனை சபை,தொழிற்சங்க இயக்கங்கள்,சார்புடைய அமைப்புகளாலும் கட்சியைப் பலப்படுத்துவோம். அடுத்த வருடம் தேர்தலுக்கான வருடமாகும்.எந்நேரத்திலும் தேர்தலை சந்திக்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது.இந்த போராட்டத்திற்கு அனைவரும் ஆதரவு தருமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்."- என்றார் ரஞ்சித் மத்தும பண்டார. (அ)

# வடக்கில் மீண்டுமொரு பலமான ஆயுதப்போராட்டம் உருவாகாது!

## அடித்துக் கூறுகிறார் அநுரகுமார

கொழும்பு, செப். 14

**“உள்நாட்டு போரால் வடக்கு மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். எனவே, வடக்கில் மீண்டுமொரு பலமான ஆயுத போராட்டம் உருவாகுவதற்கான சாத்தியம் இல்லை, அதற்கான வாய்ப்பு அரிதிலும் அரிது என்றே கூறவேண்டும்.” - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



ஓய்வுபெற்ற முப்படை அதிகாரிகளுடன் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

இலங்கையில் பல்லின சமூகம் வாழ்கின்றது, பல கலாசாரம் இருக்கின்றது. தேசத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில் இவர்களுக்கிடையில் நல்லிணக்கம், ஐக்கியம் என்பது மிக அவசியம். போர் முடிவடைந்த பின்னர் நல்லிணக்க அமைச்சுகூட உருவாக்கப்பட்டது. அரசியல் செய்வதாக இருந்தால் அவர்களுக்கு இங்கு இன ஐக்கியம் இருக்ககூடாது, அதனால் அரசியல் ரீதியில் மக்களை பிளவுபடுத்தினர்.

2009 இல் போர் முடிவடைந்த பிறகு ஒன்றரை தசாப்த காலத்துக்குள் இலங்கையில் மீண்டும் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெறும் என நினைத்தீர்களா? எவரும் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அரசியல்வாதிகளுக்கு ஆட்சியை பிடிக்கவேண்டிய தேவைப்பாடு இருந்தது.

2015 இல் ஆட்சியை இழந்த பின்னர் வேலையை மீண்டும் ஆரம்பித்தனர், வடக்கில் மீண்டும் ஒரு போர் பற்றிய தகவல்களை பரப்பினர். புலிகளின் நிழல் என்றெல்லாம்கூட நிறைய செய்திகள் உருவாக்கப்பட்டன.

போரை முடிவுக்கு கொண்டுவந்த உங்களுக்கு (முப்படையினர்) புலிகள் அமைப்பு மீள வருவது தொடர்பில் போர்சார்ந்த கருத்தொன்று இருக்கலாம், எனக்கு அரசியல் கருத்தொன்றும் உள்ளது. அதாவது வடக்கில் மீண்டும் பலமான ஆயுதக் குழுவொன்று உருவாவதற்கான சாத்தியம் மிகக்குறைவு, அதற்கு இடமில்லை.

ஏனெனில் போரால் வடக்கு மக்களே அதிகம் பாதிக்கப்பட்டார்கள், எந்நாளும் போரை எதிர்கொண்டனர், ஆயுதக் குழுக்களிடையில் மோதல் இருந்தது. இந்திய இராணுவத்துடன் மோதல் இருந்தது. 30 வருட போரால் வடக்கே பெரிதம் பாதிக்கப்பட்டது. அங்குள்ள தாய்மாருக்கு தமது பிள்ளையை படிக்க வைக்க வேண்டும், சிறந்த வேலைக்கு அனுப்ப வேண்டும், தமது பிள்ளைகளை மணம்முடித்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்காதா? ஆனால் வடக்கு இளைஞர்கள் யுத்தத்துக்காகவே பிறந்தவர்கள் என்ற எண்ணம் தெற்கில் விதைக்கப்படுகின்றது.

2015 இற்கு பிறகே புலிகளின் எழுச்சி பற்றி அதிகம் செய்திகள் பரப்பட்டன, ஆவா குழு பற்றிகூட அச்சம் கிளப்பட்டது, 2015-2017 காலப்பகுதிக்கு பின்னர் அது பற்றி பேசப்படவில்லை. அதன்பின்னர் முஸ்லிம் அடிப்படைவாதம் பற்றி கதைக்கப்பட்டது-என்றார்.(அ)

# சர்வதேச விசாரணை பற்றி அமைச்சரவையில் ஆராய்வு

கொழும்பு, செப். 14

“உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்துவதில் பிரச்னை இல்லை. இது தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு உரிய தீர்மானம் எடுக்கப்படும்.” - என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் -4 அலைவரிசை வெளியிட்டுள்ள காணொளி மற்றும் தாக்குதலின் பிரதான சூத்திரதாரி உள்ளிட்டவர்களை கண்டறிவதற்கு சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. கத்தோலிக்க திருச்சபையும் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.



இந்நிலையிலேயே சர்வதேச விசாரணையை நடத்துவதற்கு அரசு தயார் என்ற விடயத்தை அமைச்சர் மகிந்த அமரவீர அறிவித்துள்ளார்.

“சர்வதேச விசாரணை கோரிக்கை தொடர்பில் நாமும், ஜனாதிபதியும் அமைச்சரவையில் கலந்துரையாடி முடிவொன்றை எடுப்போம், சர்வதேச விசாரணைக்கு இடமளிக்கலாம், எவராவது தவறிழைத்திருந்தால் அவர்களுக்கு தகுந்த தண்டனை பெற்றுக் கொடுக்கப்படும்.” - எனவும் அவர் கூறினார். (அ)

# சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது!

கொழும்பு, செப். 14

ஹற்றன் - நோர்வூட் - போற்றி தோட்டப்பகுதியில் சட்ட விரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் காலை கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டனர்.

பொகவந்தலாவையைச் சேர்ந்த 17, 20 மற்றும் 25 வயதான இளைஞர்களே சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர்கள் ஹற்றன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். (அ)

# 120 கி.மீ. நீளமான இலங்கை-இந்திய மின்சார இணைப்பு பாதை பற்றி ஒரு வாரத்தில் முடிவு!

கொழும்பு, செப். 14

இந்தியாவுடன் மின்சார கட்டமைப்பை இணைப்பதற்கு, கடலுக்கு அடியில் கேபிள் முறையை நிறுவதற்கோ அல்லது கடலுக்கு மேலாக மின் கம்பங்கள் வழியாக இணைப்பை ஏற்படுத்தவதற்கோ இலங்கை தயாராக உள்ளது என்று இலங்கை மின்சாரசபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொழில்நுட்ப அறிக்கையின் அடிப்படையில், இரு நாடுகளும் ஒரு வாரத்தில் அதை இறுதி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை தரப்பு அனைத்து விவரங்களையும் இந்தியாவிடம் சமர்ப்பித்ததாக திட்டம் பற்றி நன்கு அறிந்த மின்சாரசபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

“கடலுக்கு அடியில் கேபிள்கள் மற்றும் மின்கம்பங்கள் வழியான இணைப்பு இரண்டையும் நாங்கள் முன்மொழிந்துள்ளோம். நாங்கள் இரண்டிற்கும் திறந்திருக்கிறோம். கடலுக்கடியில் உள்ள கேபிள்களில், ஆரம்ப செலவு அதிகம். கடலுக்கு மேலான மின்கம்பங்கள் வழிக்கு அசல் செலவு குறைவாக இருந்தாலும், அதன் பிறகு பராமரிப்புக்கு அதிக செலவாகும். இரண்டு விருப்பங்களையும் நாங்கள் முன்மொழிந்துள்ளோம், ”என்று அவர் கூறினார்.

மின் பாதையின் மொத்த நீளம் சுமார் 120 கிலோமீற்றர் இருக்கும். பின்னர் தேர்ந்தெடுக்கப்படும் இணைப்புப் புள்ளிகளைப் பொறுத்து இது சிறிது மாறக்கூடும்,” என்று அவர் கூறினார்.

முன்னதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின்போது, இரு தரப்பினரும் இரண்டு மின் கட்டங்களையும் இணைக்கும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்தியாவின் அதானி குழுமம் ஏற்கனவே இலங்கையில் காற்றாலை மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான முதலீட்டை ஆரம்பித்துள்ளது. இந்தியா தற்போது பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பூட்டானுடன் தனது மின்கட்டமைப்பை இணைத்துள்ளது. (அ)

# சைபர் தாக்குதல் தொடர்பான விரிவான விசாரணை ஆரம்பம்

கொழும்பு, செப். 14

அரச மின்னஞ்சல் முகவரிகளை இலக்கு வைத்து அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சைபர் தாக்குதல் தொடர்பில் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனத்திடம் அறிக்கை கோரப்பட்டுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 26ஆம் திகதி சைபர் தாக்குதல் காரணமாக பல அரச நிறுவனங்களின் மின்னஞ்சல் பரிமாற்ற தரவுகள் காணாமல் போயுள்ளதாக இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் தெரிவித்திருந்தது.

பழஎ.டம டொமைனுக்குச் சொந்தமான தரவு அமைப்பை புதுப்பிக்கத் தவறியதன் காரணமாக தாக்குதலைத் தடுக்க முடியவில்லை என அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி மகேஷ் பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, சைபர் தாக்குதலை நடத்திய குழுவின் தகவல்கள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் குறிப்பிட்டார். (அ)

# பொலிஸ் உத்தியோகத்தராக வேடமிட்ட பெண் ஒருவர் பொரளையில் சிக்கினார்!

கொழும்பு, செப். 14

தம்மை பொலிஸ் உத்தியோகத்தர் என அறிமுகப்படுத்தி பணமோசடியில் ஈடுபட்டு வந்த பெண் ஒருவர் பொரளை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

24 வயதுடைய குறித்த பெண் கல்கிஸை பகுதியிலுள்ள தனியார் காப்புறுதி நிறுவனமொன்றில் பணிபுரிந்து வந்ததாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மொரட்டுவை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய குறித்த பெண் முறைப்பாட்டாளர்களிடம் இரண்டு சந்தர்ப்பங்களில் பணத்தை பெற்றுள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

அத்துடன் சந்தேகநபரான குறித்த பெண் போலி அடையாள அட்டை மற்றும் பொலிஸ் தலைமையகத்தின் முகவரியில் தயாரிக்கப்பட்ட போலி ஆவணம் என்பவற்றின் படங்களை வாட்ஸ்அப் மூலம் முறைப்பாட்டாளர்களுக்கு அனுப்பியுள்ளமையும் தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

# முல்லைத்தீவில் குடும்பஸ்தர் கொலை; 2 சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது!

முல்லைத்தீவு, செப். 14

முல்லைத்தீவு - சிலாவத்தையில் குடும்பஸ்தர் ஒருவர் கொலை செய்யப்பட்டு, உடைமைகள் கொள்ளையிடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புபட்ட இருவர் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் கடந்த ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி அதிகாலை வீடொன்றுக்குள் நுழைந்த இரண்டு கொள்ளையர்கள் வீட்டிலிருந்த மூவர் மீது தாக்குதல் நடத்தி பணம், 10 பவுண் நகைகளைக் கொள்ளையடித்துவிட்டு தப்பிச் செல்லும்போது கொள்ளையர்களால் வீட்டின் உரிமையாளர் தாக்கப்பட்டு உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில், இந்த கொள்ளை, கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதிகளைச் சேர்ந்த 27, 26 வயதுடையவர்கள் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நிதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு 21 ஆம் திகதிவரை தடுப்புகாவலில் வைக்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

மற்றைய நபர் முல்லைத்தீவு பொது வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து சர்வதேச விசாரணை தேவையில்லை

## முன்னாள் தூதுவர் சரத் கோன்கஹகே

கொழும்பு, செப். 14

உயிர்த்த ஞாயிறு அன்று நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் சர்வதேச மட்டத்திலான விசாரணை இலங்கைக்கு அவசியமில்லை என சுவிற்சர்லாந்துக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் சட்டத்தரணி சரத் கோன்கஹகே தெரிவித்தார்.

இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கையிலேயே அவர் இந்த விடயத்தை கூறினார்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு, பரணகம ஆணைக்குழு மற்றும் உடலகம் ஆணைக்குழு என்பன சர்வதேச அங்கீகாரத்தை பெற்றுள்ள நிலையில், இந்த தாக்குதல் தொடர்பில் சர்வதேசத்தை நாடவேண்டிய அவசியமில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

பிரித்தானியாவின் சனல் 4 புலம்பெயர் நாடுகளின் உதவியுடன் இலங்கை மற்றும் இலங்கையர்களை ஆபத்துக்கு உள்ளாக்குவதற்காக இதனைச் செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், ஒவ்வொரு முறையும் சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் நடைபெறும் போது இலங்கை மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. அதேபோன்று இம்முறையும் சனல் 4 அவ்வாறானதொரு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது என அவர் மேலும் கூறினார்.

(அ)

# இலங்கையில் 34,600 ரூபாவுக்கு விற்கப்பட்ட கிம்புலா பணிஸ்!

கொழும்பு, செப். 14

தம்புள்ளை பிரதேசத்தில் கிம்புலா பணிஸ் எனப்படும் பனிஸ் வகையொன்று 34600 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

தம்புள்ளை பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட சந்தையொன்றில் இவ்வாறு குறித்த பணிஸ் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்த பணிஸை ஜேர்மன் பிரஜைகள் சிலர் கொள்வனவு செய்துள்ளதாக தெரியவருகிறது.

தம்புள்ளை பிரதேசத்தைச் சேர்ந்த சிலருக்கும் ஜேர்மனிய பிரஜைகளுக்கும் இடையில் இந்த பணிஸை கொள்வனவு செய்வது தொடர்பில் ஏலம் நடைபெற்றுள்ளது.

இந்த ஏல விற்பனையில் ஜேர்மனிய பிரஜைகள் 34600 ரூபா விலையை நிர்ணயித்து அதனைக் கொள்வனவு செய்துள்ளனர்.

இவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட பணிஸை பிரதேசத்தைச் சேர்ந்த சிறுவன் ஒருவனுக்கு ஜேர்மனிய பிரஜைகள் வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு முன்னர் கலேபிந்துனுவெவ பகுதியில் இவ்வாறான ஓர் ஏல விற்பனையில் ஒரு கிம்புலா பனிஸ் 22200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஹரின் பெர்னாண்டோவுக்கு எதிரான விசாரணை நிறைவு செய்ய பணிப்பு



கொழும்பு, செப். 14

ஏப்ரல் 21 தாக்குதல் சம்பவம் தொடர்பில் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவுக்கு எதிரான விசாரணைகளை நிறைவு செய்யுமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக சட்டமா அதிபர் நேற்று உயர்நீதிமன்றுக்கு அறிவித்துள்ளார்.

இநத சம்பவம் தொடர்பில் தாம் கைது செய்யப்படுவதை தடுக்கும் வகையில் உத்தரவொன்றை பிறப்பிக்குமாறு கோரி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ முன்னதாக அடிப்படை உரிமைகள் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திலிப பீரிஸ் இந்த அறிவிப்பை விடுத்திருந்தார்.

இதன்போது, இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் விசேட விசாரணை பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பான கோப்புகளை ஆராய்ந்த சட்டமா அதிபர், குறித்த பணிப்புரையை விடுத்ததாக பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, பிரீத்தி பத்மன் சூரசேன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எவ்வாறாயினும், இந்த மனு மீதான விசாரணை தொடருமா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்காக, நீதியரசர் ஜனக் டி சில்வா அங்கம் வகிக்காத நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் அதனை எதிர்வரும் 18ஆம் திகதி அழைப்பதற்கும் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

# சீனா வழங்கிய மண்ணெண்ணெய் மீனவர்களுக்கு கிடைக்கவில்லை!

கொழும்பு, செப். 14

இலங்கை மீனவர்களுக்கு விநியோகிப்பதற்கு சீன அரசாங்கத்தினால் மண்ணெண்ணெய் வாங்கப்பட்ட போதும், மீன்பிடி படகுகளுக்கு இதுவரை வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, 29,057 மீன்பிடி படகுகளுக்கு இதுவரை மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், சிலாபம் பிரதேச மீனவர் அமைப்புகளின் பிரதிநிதிகள் குழுவொன்று கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்காமை தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளது.

எரிபொருள் கிடைக்காத மீனவர்களுக்கு எதிர்வரும் இரண்டு நாட்களில் உரிய எரிபொருளை வழங்கவுள்ளதாக அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இதன்படி, முதல் கட்டமாக எரிபொருள் கிடைக்காத மீனவர்களுக்கு 150 லீற்றர் மண்ணெண்ணெயும், எரிபொருளை பெற்றுக்கொண்டவர்களுக்கு 75 லீற்றர் மண்ணெண்ணெயும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# போலிக் கையெழுத்திட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி

## 30 சாராயப் போத்தலுடன் சிக்கியவர் விடுதலை!

கொழும்பு, செப். 14

முப்பது சட்டவிரோத மதுபானப் போத்தல்களை வைத்திருந்தமை தொடர்பான வழக்கில், பிரியங்கரகம காவல்துறையின் பொறுப்பதிகாரி நீதிமன்றத்தில் போலி கையெழுத்துடன் தவறான வாக்குமூலத்தை சமர்ப்பித்ததன் காரணமாக பிரதிவாதி ஒருவரை விடுதலை செய்து தம்புத்தேகம நீதவான் புத்திக மல்வத்த உத்தரவிட்டுள்ளார்.

பிரதிவாதி தம்புத்தேகம களுந்தேகம பகுதியைச் சேர்ந்தவர்.

இந்த குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக 30 சட்டவிரோத மதுபானப் போத்தல்களை வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பில், தம்புத்தேகம நீதவான் நீதிமன்றில் 72680 இலக்க வழக்கு தொடரப்பட்டிருந்தது. வழக்கு காட்சிப் பொருட்களை (மாதிரிகள்) அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பிவைப்பது தொடர்பாக, பிரியங்கரகம பொலிஸ் பரிசோதகர் லக்சிறி விக்கிரமகே நீதிமன்றில் சத்தியப் பிரமாணச் சாட்சியத்தை வழங்கியிருந்தார். அரசாங்க பகுப்பாய்வாளரிடம் அவரது கையெழுத்து இருந்தது.

இதேவேளை, தம்புத்தேகம நீதவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள மற்றுமொரு வழக்கு தொடர்பில் பிரதான பொலிஸ் பரிசோதகர் லக்சிறி விக்ரமகே கையொப்பமிட்ட மற்றுமொரு சத்தியக் கடதாசி மீது கவனம் செலுத்திய நீதவான் புத்திக மல்வத்த, நீதிமன்றில் இரண்டு வழக்குகள் தொடர்பில் சாட்சியமளித்த பிரதான பொலிஸ் பரிசோதகர் அந்த இரண்டிலும் இரண்டு முரண்பட்ட கையொப்பங்கள் இடப்பட்டுள்ளது பற்றி கேட்டார்.

இந்த இரண்டு கையொப்பங்களின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட இரண்டு கையொப்பங்களையும் அரசாங்க பகுப்பாய்வாளரிடம் அனுப்பவேண்டியிருந்தால், சாட்சியான பிரதான பொலிஸ் பரிசோதகரின் வேலை இழக்கும் அபாயம் உள்ளதாகவும் நீதவான் தெரிவித்தார்.

தம்புத்தேகம நீதவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள 72680 இலக்க வழக்கு தொடர்பில் அவர் சமர்ப்பித்த வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அவரது உண்மையான கையொப்பம் அல்ல என பிரியங்கரகம பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் விக்கிரமகே நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

அந்த கையொப்பம் போலி கையொப்பம் என்பதை ஏற்றுக் கொள்வதாக சாட்சியாளர், பொலிஸ் பரிசோதகர் நீதிமன்றத்தில் மேலும் தெரிவித்தார்.

இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி லால் தலகல்ல, நீதிமன்றில் சாட்சியமளித்த பிரதான பொலிஸ் பரிசோதகர் லக்சிறி விக்ரமகே இந்த நீதிமன்றத்தின் சாட்சிப் பெட்டிக்கு வந்து சத்தியப் பிரமாணம் செய்து நீதிமன்றில் கூறுவது உண்மையென உறுதியளித்தார்.

முதலில் இந்த நீதிமன்றத்தின் 72680 எண் கொண்ட வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் அவரது உண்மையான கையொப்பம் இருப்பதாக கூறினார்.

எவ்வாறாயினும், குறித்த பிரமாணப் பத்திரத்தில் உள்ள கையொப்பம் போலியானது என பரிசோதகரே ஒப்புக்கொண்டு சாட்சியமளித்துள்ளதை நீதிமன்றில் வலியுறுத்திய சட்டத்தரணி தலகல்ல, போலி கையொப்பத்துடன் பிரமாணப் பத்திரம் மூலம் இந்த வழக்கை தொடர்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக மேலும் குறிப்பிட்டார்.

தம்புத்தேகம நீதவான் புத்திக மல்வத்த, இந்த உண்மைகளை கவனத்தில் கொண்டு,

72680 இலக்கம் கொண்ட இவ்வழக்கு தொடர்பாக அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு வழக்குக் காட்சிப் பொருட்களை (மாதிரிகள்) அனுப்புவது தொடர்பாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் கையொப்பம் பிரதம பரிசோதகர் லக்சிறி விக்கிரமகே என்பவரால் பொய்யானது என ஏற்றுக்கொள்ளப்பட்டது என திறந்த நீதிமன்றத்தில் தெரிவித்தார்

சம்பந்தப்பட்ட பிரமாணப் பத்திரம் வழக்கின் பொருளைப் பாதிக்கிறது எனவும் குறிப்பிட்டார்.

இந்த வழக்கு தொடர்ந்தாலும், குற்றம் சாட்டப்பட்டவரை குற்றவாளி என்று தீர்ப்பளிக்கும் தகுதி நீதிமன்றத்திற்கு இல்லை என்றும், அதன்படி 30 சட்டவிரோத மதுப்போத்தல்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் இருந்து குற்றம் சாட்டப்பட்டவரை விடுவிக்கவும் உத்தரவிட்டார்.(அ)

# வெள்ளை வானில் வந்தோரால் எனது உயிருக்கு அச்சுறுத்தல்!

## தேரர் ஒருவர் முறைப்பாடு

திருமலை, செப். 14

வெள்ளை வானில் வந்த சிலரால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக தெவனிபியவர இந்ரா ராம விகாரையின் விஹாராதிபதியான ‘பொல்ஹேன்கொட உபரத்ன ஹிமி‘ நேற்று மொரவெவ பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் ” நால்வர் சொகுசு வெள்ளை வேனில் எனக்கு சொந்தமான இரண்டு விகாரைகளுக்கு என்னைத் தேடிச் சென்றுள்ளனர். அவர்கள் யாரென எனக்கு தெரியாது,இதனால் எனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் திருகோணமலை இலுப்பைக்குளம் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் பொரலுகந்த ரஜமஹா விகாரையின் நிர்மாணப் பணிகளை இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிராக தான் ஆர்ப்பாட்டங்களை முன்னின்று செய்ததாகவும், இதனால் தனது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என சந்தேகிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த முறைப்பாட்டுக்கு அமைவாக தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக மொரவெவ பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மட்டக்களப்பில் பண மோசடி; 3 பேர் பொலிஸாரினால் கைது!

மட்டக்களப்பு, செப். 14

மட்டக்களப்பில் தனியர் வங்கி ஒன்றில் 18 லட்சம் ரூபா மோசடி செய்த வங்கியில் கடமையாற்றிய ஒருவரும் மற்றும் வெளிநாட்டிற்கு அனுப்புவதாக 16 லட்சம் ரூபாவை மோசடி செய்த அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினரும் கிராம அபிவிருத்தி சங்க தலைவர் உட்பட 3 பேரை கடந்த வாரம் கைது செய்துள்ளதாக மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 2018 ஆம் ஆண்டு தனியார் வங்கி ஒன்றில் கடமையற்றி வந்த வெளிகள உத்தியோகத்தர் ஒருவர் வங்கியில் கடன் பெற்றவர்கள் மாதாந்தம் வங்கிக்கு செலுத்தும் கடன் கொடுப்பனவான பணத்தை அவர்களின் வீடுகளுக்கு சென்று அறவீடு செய்து வந்துள்ளார்.

இவர் வங்கி கடனை அறவீடு செய்த பணத்தை வங்கிக்கு செலுத்தாமல் 18 லட்சம் ரூபாவை மோசடி செய்து வந்துள்ள அவருக்கு எதிராக மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்தனர்.

இதனையடுத்து குறித்த நபர் தொடர்ந்து தலைமறைவாகி வந்த நிலையில் கடந்த 4 ஆம் திகதி கைது செய்தனர்.

இதேவேளை திக்கோடை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம் பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பவுதாக தெரிவித்து அவரிடம் 16 லட்சம் ரூபாவை மோசடி செய்த அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினரும் கிராம அபிவிருத்தி சங்க தலைவரான இளைஞன் ஒருவரும் அவரின் அயல் வீட்டுக்கார நண்பன் உட்பட இருவரை கடந்த 5 ஆம் திகதி கைது செய்தனர்.

இந்த இரு வேறு சம்பவங்களில் கைது செய்தவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது பிணையில் விடுவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)



# கல்முனை நகர் ஸ்ரீ முருகன் தேவஸ்தான தேர்த் திருவிழா

அம்பாறை,செப்.14

கல்முனை நகர் ஸ்ரீமுருகன் தேவஸ்தான பிரமோட்சவ விழா கடந்த 02 ஆம் திகதி கொடியேற்றதுடன் ஆரம்பமாகி நேற்று தேரோட்டம் இடம்பெற்றது.

கல்முனை முருகன் தேவஸ்தானத்தில் இருந்து ஆரம்பித்த தேர்த் திருவிழா கல்முனை நகர் வழியாக தால வெட்டுவான் சந்தி வரை சென்று பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

இப்ரமோட்சவ விழா இன்று நடைபெறும் தீர்த்தோற்சவத்தை தொடர்ந்து கொடியிறக்கத்துடன் நிறைவுபெறவுள்ளது.

# மாணவிக்கு பாராட்டு



அம்பாறை, செப். 14

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் தரம் 03 இல் கல்வி பயிலும் மாணவி எம்.ஐ.ஐ. அதாபா மனாரி ஆங்கில தினி போட்டியில் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்று, மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டு, பாடசாலைக்கு நற்பெயரை ஈட்டிக் கொடுத்துள்ளதாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம். இல்லியாஸ் தெரிவித்தார்.

இவ் வெற்றிச் சாதனையை நிலைநாட்டிய இம்மாணவியைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது.

இதன்போது இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்து பயிற்றுவித்து வழிநடாத்திய ஆசிரியைகளான திருமதி ஏ. ஆர். அஸ்மினா, திருமதி எல். பாறூக், திருமதி எம்.ஐ. சுலைனா உட்பட பெற்றோருக்கும் அதிபர் நன்றி தெவித்தார். (அ)

# கல்முனை ஸாஹிரா வரலாற்றுச் சாதனை



அம்பாறை, செப். 14

இம்மாதம் 9ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் மட்டக்களப்பு வெபர் உள்ளக அரங்கில் நடைபெற்ற கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான கைப்பந்து போட்டியில் 17வயதுக்கு உட்பட்ட பிரிவில் கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை அணி 2 ஆம் இடத்தைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டதுடன் 20 வயதுக்கு உட்பட்ட அணி 4 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

வரலாற்றில் முதன்முறையாக கைப்பந்து போட்டி கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்றதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இப்போட்டியில் 51 பாடசாலைகள் பங்குபற்றி இருந்தன. (அ)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 24, மார்ட்டின் வீதி, ஆதன இல. 18/15 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சந்திரகுலசிங்கம் எதிர்மனசிங்கம் சொலமன் ஜோன் மாசில்லாவின் உரித்தாளரும் என்ற பெயரில் யாழ்.மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

இதன் கீழ் அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் ஆதனம் ஜோசப் அந்தோனி நீக்லஸ் சவிரிமுத்துவும் மேரி யோசப்பின் சவிரிமுத்துவும் 27.08.1960ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு F.E.R. வன்னித்தம்பி முகதாவில் 717ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட சீதன உறுதி மூலம் அவரது மகளான மார்ஜர் மரீனா அன்ரனஸ் சவிரிமுத்து சாமுவேல் பீட் ஜோசப் புவிமானசிங்கி என்பவருக்கு விற்றுள்ளார். குறித்த ஆதனம் வழக்கு இல. ஈடு/8016 விற்பனவிற்கான கட்டளைக்கமைய சோமசுந்தரம் நாசிங்கம் 1968.11.23ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு J. பற்றிக் முகதாவில் 3050ஆம் இலக்க உறுதி மூலம் ஜோன்பிள்ளை தைரியர் என்பவருக்கு விற்றுள்ளார். யாழ்ப்பாணம், கொழும்புத்துறை கிழக்கைச் சேர்ந்த ஜோன்பிள்ளைக்கு விற்றுள்ளனர்.

குறித்த ஆதனம் கனடாவில் வசிக்கும் தைரியர் றொபின்சன், தைரியர் கரிசன், தைரியர் டெரிசன், தைரியர் ஜஸ்மின், தைரியர் சேறின், தைரியர் விக்ரறின் மற்றும் தைரியர் லினந் ஆகியோரின் அற்றோனியத் தத்துவக்காரரான அன்ரனற் பேர்ளின் சாமிநாதர் 17.07.2020ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 1174ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அற்றிக் பிரசாந் சாமிநாதருக்கு வழங்கியுள்ளனர்.

பின்னர் சாமுவேல் பீட்ஜோசெப் புவிமனசிங்கி கைம்பெண் மார்ஜரி மரீனா அன்ரனற் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற வழக்கு இல. காணி/596/2017 வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் பிரகாரமும் தனது சீதனமும் என வெளிப்படுத்தி 01.03.2022ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு தக்ஷாமினி முகாதாவில் 490ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதி மூலம் மரியதாஸ் அடைக்கலதாசும் பெண் கலாஞானி என்பவருக்கு அறுதியாக விற்றுள்ளார்.

அதன் பின்னர் சொரியலாக காணப்பட்ட நிலப்பரப்பு 3 குளி 4.76 இனை முதலாம் பகுதியாக 3/4 பங்கினை (நிலப்பரப்பு 2 குளி 8.08) நிந்தமாக மரியதாஸ் அடைக்கலதாஸ் பெண் கலாராணியும் மிகுதியினை (குளி 14.68) 2ஆம் பகுதியாக அற்றிக் பிரசாத் சாமிநாதருக்கு 24.04.2022ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 1989ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் வழங்கியுள்ளார்.

பின்னர் 24.04.2022ஆம் திகதியிட்ட பிரசித்த நொத்தாரிசு வீரகத்திப்பிள்ளை கௌதமன் முகதாவில் 1989ஆம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் சொரியலாக காணப்பட்ட நிலப்பரப்பு 3 குளி 4.76 இனை முதலாம் பகுதியினராக 3/4 பங்கினை நிந்தமாக (நிலப்பரப்பு 2 குளி 8.08) மரியதாஸ் அடைக்கலதாசும் பெண் கலாஞானியும் மிகுதியினை (குளி 14.68) 2ஆம் பகுதியாக அற்றிக் பிரசாத் சாமிநாதருக்கு பிரிவிட்டுள்ளனர்.

**ஆதன அட்டவணை 01**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணம் மாநகரசபை, யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவு சுண்டுக்குளி கோவிற்பற்று காரையூர் இறை. J/74 கிராமசேவகர் பிரிவில் அமைந்துள்ள 'கிழவிதறை' நிலப்பரப்பு 3 குளி 3/8. இது நிலஅளவையாளர் N. கேதீஸ்வரன் 2018.09.18ஆம் திகதி அளந்து தயாரித்த 4068ஆம் இலக்கப்படத்தில் துண்டுகள் 1-2 ஆக காட்டப்பட்டவாறு நிலப்பரப்பு 3 குளி 4.76. இதில் ஒருபக்கமாக துண்டு 1 எனக் காட்டப்பட்ட நிலப்பரப்பு 00 குளி 14.68 இந்த நிலப்பரப்பு பூச்சியம் குளி பதினான்கு தசம் பூச்சியம் ஆறு எட்டுக்குரிய எல்லை.

கிழக்கு :- றோமன் கத்தோலிக்க மிஷனுக்குரிய ஆதனம்.
வடக்கு:- றெஜினா சந்திரோதயம் யோகராசா மற்றும்
மேற்கு:- மார்றிலீட் யோசப் மற்றும் விக்ரோறியா சைமனின் ஆதனமும், ஒழுங்கையும்
தெற்கு:- மேற்குறித்த 4068ஆம் இலக்கப்படத்தில் துண்டு 2 (1ஆம் பகுதியினருக்கு பிரித்துவிடப்படும் ஆதனம்), தடங்கலும் வீடு, வடக்கெல்லையில் உள்ள கிணற்றில் அரைவாசியும் செய் பயிர் வான்பயிர் உட்பட இதற்குச் சேர்ந்தவைகளும்.

தற்போது அற்றிக் பிரசாத் சாமிநாதர் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்காக விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒருபகுதிக்கு/ முழுவதற்கும் உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது அற்றிக்பிரசாத் சாமிநாதர் எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பிரச்னைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

# சிங்கப்பூர் அதிபராக இன்று பதவியேற்கின்றார் தர்மன்!



சிங்கப்பூர் சிற்றி, செப். 14

சிங்கப்பூர் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் வம்சாவளியான தர்மன் சண்முகரத்தினம் வெற்றி பெற்று நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதியாக இன்று பதவியேற்கவுள்ளார்.

சிங்கப்பூரில் கடந்த முதலாம் திகதியன்று ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்றது. இந்த ஜனாதிபதித் தேர்தலுக்கான போட்டியில் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தர்மன் சண்முகரத்னம், சீன வம்சாவளிகளான இங் கொக் செங் , டான் கின் லியான் ஆகியோர் போட்டியிட்டனர்.

இதையடுத்து ஜனாதிபதி தேர்தலில் மும்முனைப் போட்டி ஏற்பட்டது. இதில் தமிழ் வம்சாவளியான தர்மன் சண்முகரத்தினம் 70 சதவீத வாக்குகளுடன் பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றார்.

இதையடுத்து சிங்கப்பூர் ஜனாதிபதியாக தேர்வாகியதையடுத்து இன்று ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ளார்.

ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்பு, தர்மன் சண்முகரத்தினம் 2019 மற்றும் 2023 இற்கு இடையில் மூத்த அமைச்சராக பணியாற்றினார். 2015 மற்றும் 2023 இற்கு இடையில் சமூக கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு மந்திரியாகவும், 2011 மற்றும் 2023 இற்கு இடையில் சிங்கப்பூர் நாணய ஆணையத்தின் தலைவராகவும், 2011 மே முதல் 2019 மே வரை சிங்கப்பூரின் துணைப் பிரதமராகவும் பணியாற்றினார்.

தர்மன் உலகப் பொருளாதார மன்றத்தின் அறங்காவலர் குழுவில் உறுப்பினராகவும் உள்ளார். 2024 ஆம் ஆண்டு ஐ.நா. உச்சி மாநாட்டிற்கு பயனுள்ள பலதரப்பு பற்றிய பரிந்துரைகளை வழங்கும் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளரின் உயர்மட்ட ஆலோசனைக் குழுவில் அவர் உறுப்பினராகவும் உள்ளார்.

பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகள் மும்முரமாக நடந்து வருகின்ற நிலையில், தமிழ் வம்சாவளியான தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூர் ஜனாதிபதியாக இன்று பதவியேற்கவுள்ளார். (அ)



# பங்களாதேஷுக்கு கடன் வழங்கும் ஒப்பந்தத்தில் பிரான்ஸ் கையெழுத்து

பாரிஸ், செப். 14

உட்கட்டமைப்பு மேம்பாட்டை இலக்காகக் கொண்டு பங்களா தேஷுக்கு கடன்களை வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் கையெழுத்திட்டுள்ளார்.

அத்துடன், புவி கண்காணிப்பு செயற்கைக்கோள் அமைப்பை வழங்குவதற்கான கடிதமும் கையெழுத்திடப்பட்டுள்ளது.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் பங்களாதேஷுக்கு இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தார்.

இரு நாடுகளுக்கு இடையிலான உறவுகளை மேம்படுத்தும் வகையில் இம்மானுவேல் மக்ரோன் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை சந்தித்திருந்தார்.

இதற்கமைய பங்களாதேஷ் பொருளாதார உறவுகள் பிரிவு பிரான்ஸ் மேம்பாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

பிரதமர் அலுவலகத்தில் இந்த நிகழ்வில் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் ஆகியோரும் கலந்துகொண்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

(அ)

# உணவு நஞ்சாகி ஒருவர் மரணம்!

## ஆபத்தான நிலையில் 8 பேர்! பிரான்ஸ் உணவகத்தில் பற்றீரியா



பாரிஸ், செப். 14

உணவில் மிக அரிதாக ஏற்படுகின்ற போட்லினியம் நஞ்சு காரணமாக ஒருவர் உயிரிழந்தார். எட்டுப் பேர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பிரான்ஸின் தென் மேற்கு போர்தோ நகரில் உள்ள ஓர் உணவகத்தில் உணவருந்திய வெளிநாட்டவர்கள் சிலரே இவ்வாறு ஒருவகைப் பக்ரீரியாத் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் அனைவரும் நகரில் உள்ள பிரபல உணவகத்தில் கடந்த 4-10 ஆம் திகதிகளுக்கிடையில் ஒருவகை மீன் கலந்த உணவைச் சாப்பிட்டுள்ளனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

போர்தோ பல்கலைக் கழக மருத்துவ மனையில் ஆபத்தான நிலைமையில் சேர்க்கப்பட்டவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார். எட்டுப் பேருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நச்சு உடலில் பரவி அறிகுறியே ஏற்படுத்த சில மணி நேரம் முதல் சில நாட்கள் வரை எடுக்கலாம் என்பதால் அதே உணவகத்தில் அருந்திய மேலும் பலர் பாதிக்கப்பட வாய்ப்புள்ளது என்று சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் அலுவலகம் எச்சரித்துள்ளது.

செய்தி ஊடகங்களது தகவலின் படி பாதிக்கப்பட்டவர்களில் அமெரிக்கா, கனடா, ஜேர்மனி நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளும் அடங்கியுள்ளனர்.

பெரும்பாலும் தகரத்தில் அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட உணவு வகைகளில் உருவாகுகின்ற இந்த போட்லினியம் பக்ரீரியம் நரம்பு மண்டலத்தைச் செயலிழக்கச் செய்து மரணத்தை ஏற்படுத்தும் ஆபத்து மிக்க நச்சுக் கிருமி ஆகும்.

உலக சுகாதார அமைப்பின் தகவலின் படி போட்லினியம் பக்ரீரியம் நஞ்சினால் பாதிக்கப்படுவோரில் பத்து வீதமானவர்களே நரம்பு மண்டலச் செயலிழப்புக்கு ஆளாகின்றனர். ஆயினும் நேரகாலத்துடன் சிகிச்சை பெறத் தவறுவதால் இந்த நஞ்சு அதிக எண்ணிக்கையில் உயிரிழப்புகளை ஏற்படுத்துகின்றது.

(அ)

# ரஷ்யா - வடகொரியா ஜனாதிபதிகளின் அதிகாரபூர்வ கலந்துரையாடல் ஆரம்பம்

மொஸ்கோ, செப். 14

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் வடகொரிய ஜனாதிபதி கிம் யோங் உன் இடையேயான அதிகாரபூர்வ கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, குறித்த கலந்துரையாடல் ரஷ்ய விண்வெளி ராக்கெட் ஏவுதளத்தில் இடம் பெற்றது.

இந்த கலந்துரையாடலில் வடகொரிய ஜனாதிபதியின் சகோதரியும் கலந்துகொண்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை குறித்த கலந்துரையாடலில் வடகொரியாவுக்கு தனது சொந்த செயற்கைக் கோள் மற்றும் ராக்கெட்டுகளை ஏவுவதற்கு ரஷ்யா உதவ தயாராக இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இரு நாட்டு தலைவர்களும்



உக்ரைனுக்கு எதிரான போரில் பயன்படுத்துவதற்காக ஆயுதங்களை பியோங்யாங் மூலம் மாஸ்கோவிற்கு வழங்குவது குறித்து கலந்துரையாடியிருக்கலாம் என அமெரிக்க அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

எவ்வாறாயினும் எந்தவொரு சூழ்நிலையின் போதும் ரஷ்யாவுக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதாக வடகொரிய ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

# லிபியாவில் இயற்கை கோரத் தாண்டவம்!

## 5 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பலி!! 10,000 பேர் கடலில் அடித்து செல்லப்பட்டனர்!

திரிபோலி, செப். 14

லிபியாவை தாக்கிய டானியல் புயலை தொடர்ந்து ஏற்பட்ட பெரும் வெள்ளத்தினால் சுமார் 10,000 பேர் காணாமல் போயுள்ளனர் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கங்களின் அதிகாரி ஒருவர் செவ்வாய்க்கிழமை தெரிவித்தார்.

“காணாமல் போனவர்களின் எண்ணிக்கை இதுவரை 10,000ஐத் தொட்டுள்ளது என்பதை எங்களின் சுயாதீன தகவல் மூலங்களிலிருந்து உறுதிப்படுத்த முடியும்” என்று லிபியாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் செஞ்சிலுவைச் சங்க தூதுக்குழுவின் தலைவர் ஜெனீவாவில் செய்தியாளர்களிடம் துனிசியாவில் இருந்து வீடியோ இணைப்பு மூலம் கூறினார்.

லிபியாவின் கிழக்கு- மத்திய தரைக்கடல் கடலோர நகரமான டெர்னாவின் நான்கில் ஒரு பகுதி வெள்ளத்தால் அழிக்கப்பட்டது. புயலில் நீர்தேக்கமொன்றின் அணைகள் உடைந்து இந்த பேரனர்த்தம் நிகழ்ந்தது. டெர்னாவில் மட்டும் 5,200 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக பிரதிநிதிகள் சபையால் நியமிக்கப்பட்ட அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் தாரிக் அல்-கராஸ் செவ்வாயன்று தெரிவித்தார்.

1,300 உடல்கள் குடும்பங்கள் அடையாளம் காட்டிய பிறகு புதைக்கப்பட்டன. முழுமையாக கொல்லப்பட்ட குடும்பங்களும் அடக்கம் செய்யப்பட்டனர்.

இந்த பகுதியில் 5,000 க்கும் அதிகமானோர் காணாமல் போயுள்ளனர், மேலும் 7,000 பேர் காயமடைந்தனர்.

அடையாளம் காணப்படாத உடல்களின் எண்ணிக்கை மிகப்பெரியது என்றும், ஆதாரங்கள் மற்றும் ஆதரவு இல்லாததால் தற்போது அடக்கம் செய்ய முடியாது என்றும், டெர்னாவில் வெள்ளத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை 10,000 க்கும் அதிகமாக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என தாரிக் அல்-கராஸ் தெரிவித்தார்.

இன்னும் பல மீட்கப்படாத உடல்கள் இருப்பதாகவும், துருக்கி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் இருந்து சிறப்பு மீட்புக் குழுக்கள் கடலில் அடித்துச் செல்லப்பட்ட உடல்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

(அ)

# நீதிபதிகள் தொடர்பில் தெரிவிக்கப்படும் கருத்துகள் சட்டத்தின் ஆட்சிக்கு பாதிப்பு

## சட்டத்தரணிகள் சங்கம் சபாநாயகரிடம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 14

நீதிமன்றம், நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ள வழக்குகள் மற்றும் நீதிபதிகள் தொடர்பில் முன்வைக்கப்படும் கருத்துக்களால் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுயாதீன தன்மைக்கு அழுத்தம் ஏற்படுவதாக சட்டத்தரணிகள் சங்கம் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவை சந்தித்து அறிவுறுத்தியுள்ளது.

சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன உள்ளிட்ட அதன் உறுப்பினர்கள் குழுவினருக்கும், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர்கள் இது தொடர்பாக தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பாராளுமன்றத்திற்குள்ளும் அதற்கு வெளியேயும் குறிப்பாக தற்பொழுது சேவையாற்றிவரும் நீதிபதிகளின் பெயர்களைக் குறிப்பிட்டு கருத்துக்களை வெளியிடுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இவ்வாறான நிலைமை கவலைக்குரியதாக இருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே, இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்த சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், இது குறித்த எழுத்துமூல கோரிக்கையையும் சபாநாயகரிடம் கையளித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, நீதிபதிகள் உள்ளிட்ட நீதிமன்றத்தின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு தான் தொடர்ந்தும் செயற்படுவதாகவும் எதிர்காலத்தில் இது தொடர்பில் உறுப்பினர்களின் கவனத்துக்கு கொண்டுசெல்ல எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். (அ)

# ரயில் திணைக்கள ஊழியர் படுகொலை!

கொழும்பு, செப். 14

ரயில் திணைக்கள ஊழியர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல், கல்கிஸை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரத்மலானை ரயில்வே குடியிருப்பில் அமைந்துள்ள வீட்டினுள் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு குறித்த நபர் உயிரிழந்தார் என கல்கிஸை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர் மாத்தறை, பியகஹா பகுதியைச் சேர்ந்த 41 வயதானவர் என்பதுடன், அவர் ரயில்வே குடியிருப்பில் தற்காலிகமாக வசித்து வந்தார் எனவும் தெரியவந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)



சர்வதேச கடல்சார் அமைப்புக்கான

# இலங்கையின்முதல் நிரந்தர பிரதிநிதியாக சரோஜா சிறிசேன!

கொழும்பு, செப். 14

சர்வதேச கடல்சார் அமைப்புக்கான இலங்கையின் முதல் நிரந்த ரப் பிரதிநிதிக்கான நற்சான்றிதழை இங்கிலாந்திற்கான இலங்கை தூதுவர் சரோஜா சிறிசேன சர்வதேச கடல்சார் அமைப்பின் பொதுச் செயலாளர் கிடாக் லிம்மிடம் கையளித்தார்.

செப்ரெம்பர் 08 ஆம் திகதி தூதுவர் சரோஜா சிறிசேன தனது நற்சான்றிதழ்களை சமர்ப்பித்தார் என தூதரகம் ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஒக்ரோபரில் இந்தியப் பெருங்கடல் ரிம் சங்கத்தின் தலைமைப் பதவியை இலங்கை ஏற்கவிருக்கும் நேரத்தில் சர்வதேச கடல்சார் அமைப்புக்கான அங்கீகாரம் இலங்கைக்கு கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நிரந்தர வீஸாவை வழங்க கோரி 1,000 கிலோ மீற்றர் நடைபயணத்தை மேற்கொண்ட இலங்கைத் தமிழர்!

கொழும்பு, செப். 14

அவுஸ்திரேலியாவில் நிரந்தர விஸாவை கோரி பலரட்டிலிருந்து சிட்னியில் பிரதமர் அலுவலகம் வரை நடைபயணத்தை மேற்கொண்ட இலங்கைத் தமிழ் புகலிடக்கோரிக்கையாளர் நெய்ல் பராவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் அவுஸ்திரேலியா நிரந்தர விஸா வழங்கியுள்ளது.

பிரிட்ஜிங் விஸாவினால் சிக்குண்டுள்ள அகதிகளுக்கு அவுஸ்திரேலிய பிரதமர் அன்ரனி அல்பெனிஸ் நியாயமான பதிலை வழங்கவேண் டும் எனக் கோரி நெய்ல் பரா நடைபயணத்தை மேற்கொண்டார்.

அவர் அவுஸ்திரேலியாவில் தனது குடும்பத்தவர்களுடன் பிரிட்ஜிங் விஸாவில் வசித்து வருகின்றார்.

பரா தனது நடைபயணத்தை முடிவை நெருங்கிக்கொண்டிருந்த வேளை விஸா குறித்த அறிவிப்பு வெளியாகியுள்ளது - சட்டத்தரணி கரினா போர்ட் இதனை தெரிவித்துள்ளார்.

நான் மகிழ்ச்சியும் நன்றியும் உடையவனுமாக உள்ளேன் என பரா தெரிவித்துள்ளார்.



நன்றி அவுஸ்திரேலியா. இது எனது நாடு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2012 இல் படகு மூலம் அவுஸ்திரேலியா வந்த பரா தனது மனைவி, இரண்டு பிள்ளைகளுடன் பாதுகாப்பு கோரியிருந்தார்.

நாங்கள் அனைவரும் ஒருநாள் விடுதலையாவோம் என நம்புகின்றோம். நாங்கள் அவுஸ்திரேலியாவிற்கு பங்களிப்பு செய்வோம் என உறுதியளிக்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# 4 பதில் அமைச்சர்கள் நியமனம்

கொழும்பு, செப். 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளிநாட்டுக்கு விஜயம் செய்துள்ள நிலையில் அவர் நாடு திரும்பும் வரை அவரின் கீழுள்ள அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தொழில்நுட்ப பதில் அமைச்சராக இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத்தும், சிறுவர் , மகளிர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராக இராஜாங்க அமைச்சர் அனூப பெஸ்குவலும், பதில் நிதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவும், பாதுகாப்பு பதில் அமைச்சராக இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனுவும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# புதையல் தோண்டிய நான்கு பேர் கைது!

கொழும்பு, செப். 14

வனப்பகுதியொன்றில் புதையல் தோண்டிய நால்வர் மொரகொட பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் 23, 43, 52 மற்றும் 55 வயதுடையவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

மடவளை, நாமல்புர பகுதியில் உள்ள வனப்பகுதிக்குள் புதையல் தோண்டும் போதே குறித்த நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களிடமிருந்து புதையல் தோண்ட பயன்படுத்தும் கருவிகள் உள்ளிட்ட பொருட்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# தெரிவுக்குழுவின் அறிக்கையை உடனே பகிரங்கப்படுத்துங்கள்!

## அரசிடம் கோருகிறார் விமல் வீரவன்ஸ

கொழும்பு, செப். 14

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் சனல் 4 வெளியிட்ட ஆவணப்படம் குறித்து சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்க முன்னர் குண்டுத்தாக்குதல் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக் குழு சமர்ப்பித்த அறிக்கையை ஜனாதிபதி பகிரங்கப்படுத்த வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 வெளியிட்டுள்ள ஆவணப்படம் தற்போதைய அரசியல் களத்தின் பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது.

சர்வதேச மட்டத்தில் விசாரணைகள் வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்துகிறார். அரசாங்கமும் அதற்கு இணக்கம் தெரிவிக்கும் நிலைப்பாட்டில் உள்ளதை அவதானிக்க முடிகிறது.



உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால் தேசிய புலனாய்வு பிரிவு பலவீனப்படுத்தப்படும்.

குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் புலனாய்வு பிரிவினர் அப்போதைய அரசாங்கத்துக்கு உரிய தகவல்களை வழங்கியுள்ளார்கள்.

நல்லாட்சி அரசாங்கத்தின் அரச தலைவர்களுக்கு இடையிலான முரண்பாட்டினால் தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது.

இதனை அடிப்படைவாதிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்கள்.நல்லாட்சி அரசாங்கத்தில் பகிரங்கமாக செயற்பட்ட இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் நாங்கள் குறிப்பிட்ட போது பலர் எம்மை இனவாதிகளாக விமர்சித்தார்கள்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையில் பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

இந்த குழுவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள்,முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட பெரும்பாலானோர் உறுப்பினர்களாக அங்கம் வகித்தார்கள்.

ஆனந்த குமாரசிறி தலைமையிலான குழு முழுமையான அறிக்கை சமர்ப்பித்துள்ளது. ஆகவே சனல் 4 வெளியிட்ட ஆவணப்படம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை முன்னெடுக்க முன்னர் முன்னாள் பிரதி சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தலைமையிலான குழு சமர்ப்பித்த தெரிவுக்குழு அறிக்கையை ஜனாதிபதி பகிரங்கப்படுத்த வேண்டும் - என்றார். (அ)

## புதிய பயங்கரவாத...

ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகோல்களின்படியும், நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையிலும், நாட்டு மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும் சமநிலையான சட்டத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன் தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இது தொடர்பில் நீதியமைச்சரின் தலைமையில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு, இந்த புதிய சட்டம் சாதகமான மட்டத்தில் திருத்தப்பட்டுள்ளது. நமது நாட்டில் சட்டங்களைத் திருத்தவும், புதிய சட்டங்களை உருவாக்கவும் ஒரு பொறிமுறை உள்ளது. எனவே அந்த முறைகளுக்கு ஏற்ப இந்த புதிய சட்டம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிறகு, இந்த சட்டம் குறித்த புரிதலை நாட்டு மக்கள் அனைவரும் பெற முடியும்.

இதன்படி, பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு, புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற இந்த புதிய சட்டத்தை, இந்த வாரத்திலோ அல்லது அடுத்த வாரத்திலோ விரைவாக வர்த்தமானியில் வெளியிட எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பின்னர் முதலாம் வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதன்படி, இந்நாட்டு மக்களுக்கு இந்த சட்டம் தொடர்பில் கருத்துவேறுபாடுகள் இருப்பின், ஒரு வாரத்திற்குள் அதை சவாலுக்கு உட்படுத்தி உயர் நீதிமன்றத்திற்கு செல்லும் வாய்ப்பும் உள்ளது.

உயர் நீதிமன்றத்திற்கு தனியான, விசாரணை நீதிமன்ற அதிகாரம் உள்ளது. அதன் பிரகாரம் உயர் நீதிமன்றம் வழங்கக்கூடிய அறிவுறுத்தல்களின்படி, மேலும் திருத்தங்களை மேற்கொள்ள அரசாங்கம் தயாராக உள்ளது. இந்த புதிய சட்டம் ஏற்கனவே உள்ள சட்டத்துடன் ஒப்பிடும்போது மிகவும் முற்போக்கான புதிய விடயங்களுடனேயே திருத்தப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் முதன்முதலில் 1979ஆம் ஆண்டு ஆறு மாத காலத்திற்காக கொண்டு வரப்பட்டது. ஆனால் தொடர்ந்தும் இந்நாட்டில் பயங்கரவாதச் செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்றதன் காரணமாக, இன்று வரை பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்பது தொடர்ந்தும் அமுலில் உள்ள ஒரு சட்டமாக இருக்கின்றது. ஆனாலும் 2009 இல் யுத்தம் நிறைவுக்கு வந்த பின்னர் இந்த சட்டம் தேவையா? என பல்வேறு விமர்சனங்கள் இது தொடர்பில் முன்வைக்கப்பட்டு வந்ததன் காரணமாக, 2017 மற்றும் 2018 இல், இந்த சட்டத்திற்கு திருத்தங்கள கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டன.

ஆனால் துரதிஷ்டவசமாக 2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் காரணமாக அந்த முயற்சிகள் தடைப்பட்டதுடன், மீண்டும் இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை வலுவாக அமுல்படுத்த வேண்டும் என்று கருத்துகள் மேலோங்கின.

பின்னர், கடந்த கடந்த காலங்களில் இந்த விடயம் தொடர்பில் மீண்டும் கலந்துரையாடல்கள் நடைபெற்ற பின்னர், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை தளர்த்துவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2021 செப்ரெம்பர் மாதத்தில், பொலிஸ் மா அதிபர், பயங்கரவாத செயல்களில் நேரடியாக ஈடுபட்டவர்களைத் தவிர வேறு யாரையும் இந்த சட்டத்தின் கீழ் கைது செய்யக் கூடாது என்று பொலிஸ் நிலையங்களுக்கு ஒரு சுற்றறிக்கை மூலம் அறிவுறுத்தினார்.

இதன்படி, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை விகிதாசார அடிப்படையில் குறைந்துள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ், தடுப்புக் காவலில் வைத்திருக்கும் காலத்திற்கு எந்த எல்லையும் இருக்கவும் இல்லை.

ஆனால், இந்த புதிய சட்டத்தின் மூலம் 60 நாட்கள் மாத்திரமே தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்க முடியும். மேலும், அவர்களை சட்ட பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மையங்களில் மாத்திரமே தடுத்து வைக்கவும் முடியும். இந்தப் புதிய சட்டத்திற்கு ஏற்ப ஒருவரைக் கைது செய்த பிறகு, 48 மணி நேரத்திற்குள் நீதிபதியின் முன்னிலையில் ஆஜர்படுத்தி இது தொடர்பில் விபரங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

மேலும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் யாருக்கும் வழக்குத் தொடர முடியாது. அவ்வாறு வழக்குத் தொடர வேண்டுமெனில், அது பொதுவான சட்டத்தின்படி நீதிபதியின் முன் செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தின்படியே அமைய வேண்டும்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டதன் பின்னர், சட்டத்தரணிகள், சட்டத்தரணிகள் சங்கம், சர்வதேச சமூகம், சிவில் அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் என பல்வேறுபட்டவர்கள் முன்வைத்த கருத்துகள் குறித்தும் நாம் அவதானம் செலுத்தினோம்.

அதன்படி, புதிய பரிந்துரைகளுடன் திருத்தப்பட்ட சட்டம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதற்கு அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்துள்ளது -என்றார். (அ)

## ஆஸி. தூதுவ...

பாக்லே வெளியுறவு அமைச்சகத்தில் அதன் அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர், இணைச் செயலர் (பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான்) மற்றும் சமீபத்தில் பிரதமர் அலுவலகத்தில் இணைச் செயலாளராக பல்வேறு பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

பாக்லே மே 2020 இல் கொழும்பில் பணியை ஏற்றுக்கொண்டார்.

ஜனவரி 4, 1966 இல் பிறந்த பாக்லே, லக்னோ பல்கலைக்கழகத்தில் வேதியியலில் முதுகலைப் பட்டம் பெற்றவர் மற்றும் ஹிந்தி, உருது, சமஸ்கிருதம், ஆங்கிலம், உக்ரைனியன், ரஷ்யன் மற்றும் நேபாளி ஆகிய மொழிகளைப் பேசுகிறார். (அ)

## சனல் 4 பார்த்...

வழங்கப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார்.

சனல் 4 தொடர்பிலான கடிதத்தை தயாரித்து முடித்த பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைப் பிரதிநிதியை சந்திக்கவுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் பரிந்துரையின்படி இந்த விவகாரம் குறித்து சர்வதேச விசாரணையை கோருவதாகவும் அவர் கூறினார். (அ)

## வல்லிபுர...

திங்கட்கிழமை கம்சன் போர் திருவிழா, 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வேட்டை திருவிழாவும், 27ஆம் திகதி புதன்கிழமை சப்பை ரதத் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

மறுநாள் 28ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், அடுத்தநாள் வெள்ளிக்கிழமை சமுத்திரத் தீர்த்த திருவிழாவும், சனிக்கிழமை கேணித் தீர்த்தமும் இடம்பெற்று அன்று மாலை கொடி இறக்கத்துடன் திருவிழாவுடன் நிறைவடையவுள்ளது. (ஐ-2)

## ரயில் விடாவிடில்...

கருத்தில் கொள்ளாது பணிக்கு சமுகமளிக்காத சாரதிகள், பணியிலிருந்து விலகினரென அறிவிக்கப்படுவர் என்றும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

## மோடியை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் எம்.பி., தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி., ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என். சிறீகாந்தா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருக்கே அவர் கடிதம் அனுப்பியுள்ளார்.

குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டவையாவன,

தமிழ்த் தேசிய அரசியல் கட்சித் தலைவர்கள் பிரதமர் மோடியைச் சந்திக்க நேரம் ஒதுக்கக் கேட்பது பயனுள்ளதாக இருக்குமா என்று யோசிக்கின்றேன். அடுத்த ஆண்டு மே மாதம் அவர்களின் தேர்தல். அவர் எங்களைச் சந்திக்க சம்மதிப்பார் என்று நான் உறுதியாக நம்புகின்றேன். நாம் டில்லி செல்ல வேண்டிய அவசியமில்லை. அவர் தென்மாநிலங்களுக்குச் செல்லும்போது அவரைச் சந்திக்கலாம்.

கஜேந்திரகுமார் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிரானவர் என்ற போதிலும், அரசமைப்பில் உள்ள விதிகளை அமுல்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்பதை அவர் இந்த நேரத்தில் உணர்ந்துகொள்வார் என்று நான் நம்புகின்றேன். 13ஆவது திருத்தம் தொடர்பாக இலங்கை அரசுக்கு இந்தியாவால் மட்டுமே அழுத்தம் கொடுக்க முடியும். தற்சமயம் மக்களால் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனம் எமக்கு இல்லாவிட்டால் அரச திணைக்களங்களை எதிர்க்க முடியாது. படைகளும் பௌத்த பிக்குகளும் தமிழர் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

உங்கள் அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டால், அனைவரும் கையொப்பமிட்டு அனுப்பக்கூடிய ஒரு கடித நகலை நான் தயாரிக்கலாமா என்பதை தெரிவிக்கவும். கஜேந்திரகுமார் 13ஆவது திருத்தத்தின் பலனை அவர் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் எங்களது கூட்டு நடவடிக்கைக்குத் தனது ஒப்புதலை காட்டுவதற்காகவே எங்களுடன் வர முடியும்.

நாம் யாரும் மோடியைத் தனித்தனியாகச் சந்திப்பதில் பயனில்லை. நீங்கள் ஒப்புதல் அளித்தால் சி. சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரையும் இந்த முயற்சியில் ஈடுபடுத்தலாம்.

மூன்று நாள்களுக்குள் பதிலளிக்கவும் -என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## வவுனியா...

வரவேற்கும் முகமாக பல்கலைக்கழக விடுதி மற்றும் அதனுடன் இணைந்த பகுதியில் வரவேற்பு பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த பதாதையில் சிங்கள மொழிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதுடன், ஆங்கில மொழியும் காணப்படுகின்றது. தமிழ் மொழி முற்றாக புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கு மாகாணத்தில் உள்ள இரண்டாவது பல்கலைக்கழகமும் தமிழ் மக்கள் வாழும் பகுதியில் உள்ள வன்னிக்கான பல்கலைக்கழகமுமான வவுனியா பல்கலைக்கழகம் ஆரம்பித்து இரண்டு வருடங்கள் முடிவதற்கு முன்னரே தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு சிங்களமயமாக்கல் இடம்பெறுவது குறித்து சமூக ஆர்வலர்கள் பலரும் சமூக வலைத்தளங்களில் விசனம் வெளிப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார...

சுகாதாரத் துறையில் நிலவும் பிரச்னைகள் மற்றும் தீர்வுகள் வழங்கப்படாமை ஆகியவை அந்தப் பிரச்னைகளை மேலும் வளர்த்தெடுத்துள்ளதாக சத்தியாக்கிரகத்தில் இணைந்துள்ள சிவில் அமைப்புகள் குற்றம் சுமத்தியுள்ளன.

இதேவேளை அண்மையில் பாராளுமன்றத்தில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல எதிராக எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை பெரும்பான்மையுடன் தோற்கடிக்கப்பட்டது.

பிரேரணையை ஆளுங்கட்சி தோற்கடித்திருந்தாலும் சுகாதாரத் துறையில் நிகழும் பல்வேறு நெருக்கடிகளை எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

இவ்வாறான பின்புலத்திலேயே சுகாதார அமைச்சரை பதவி விலகுமாறு சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஜனாதிபதியின்...

அவ்வாறு அழைத்தால் அதனை தம்மிடம் அறியத் தருமாறு அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுக்கிறேன். வேலை நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஆட்சியாளர்களுக்கு விருப்பம் இல்லை“ என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள 84 புகையிரத இயந்திர சாரதிகளை உடனடியாக கடமைக்கு சமுகமளிக்குமாறும், தவறினால், பதவியில் இருந்து விலகியதாக கருதப்படுமென ரயில் திணைக்களத்தால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

ஆட்சேர்ப்பு நடைமுறையில் திருத்தம், பதவி உயர்வு உள்ளிட்ட பல முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து ரயில் இயக்க பொறியியலாளர் சங்கம் கடந்த திங்கட்கிழமை நள்ளிரவு முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளது. (அ)

## கொக்குத்தொடுவ..

ஏழாம் நாள் அகழ்வாய்வு நேற்று முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கே.வாசுதேவா, சட்டத்தரணி கே. எஸ். நிரஞ்சன், ரணித்தா ஞானராசா, கிராம சேவையாளர், தடயவியல் பொலிசார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஆகியோரின் பங்கேற்புடன் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த ஏழாம்நாள் அகழ்வாய்வுகள் தொடர்பில் முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா கருத்துத் தெரிவிக்கையில்-

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் ஏழாம் நாள் அகழ்வாய்வில், மூன்று மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்தெடுக்கப்பட்டதுடன், சயனைட் குப்பி ஒன்றும், இரண்டு இலக்கத் தகடுகளும் தடயப் பொருட்களாக எடுக்கப்பட்டன.

இந்த புதைகுழியிலுள்ள எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மிக நெருக்கமாக, ஒன்றுடனொன்று பின்னிப் பிணைந்து காணப்படுவதால், அகழ்வாய்வு செய்வதற்கு அதிக நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளது. அகழ்வாய்வுகள் மேற்கொள்ளும் போது, சில நாட்களில் ஓரிரு எலும்புக்கூட்டுத் தொகுதிகளையே அகழ்ந்தெடுக்க முடிகின்றது.

ஏற்கனவே அகழப்பட்டுள்ள குழியிலிருந்து மனித எச்சங்களையும், தடயப்பொருட்களையும் முழுமையாக அகழ்வாய்வு செய்து எடுப்பதற்கு ஒரு சில வாரங்கள் நீடிக்கலாம் என நினைக்கின்றேன்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக ரணில்

## ஒக். 21ஆம் திகதி வெளியாகிறது அறிவிப்பு

கொழும்பு, செப். 14

ஐக்கிய தேசியக் கட்சியின் 57ஆவது சம்மேளனத்தில் அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதியும், கட்சியின் தலைவருமான ரணில் விக்ரமசிங்கவை அறிவிப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

இதேவேளை, இந்த சம்மேளனத்தில் 24ஆயிரம் ஆதரவாளர்கள் கலந்துகொள்ள உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐ.தே.கவின் 57ஆவது சம்மேளனம் ஒக்ரோபர் மாதம் நடைபெறவுள்ளது. கட்சியின் தேசிய மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், சம்மேளனத்தை பிரமாண்டமாக நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த 4ஆம் திகதி கூடிய கட்சியின் மத்திய செயற்குழுவிலேயே ஒக்ரோபர் மாதம் 57ஆவது சம்மேளனத்தை பிரமாண்டமாக நடத்த தீர்மானிக்கப்பட்டதுடன், அதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகளை வழி நடத்தவும் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

இந்நிலையில், ஐ.தே.கவின் 57ஆவது சம்மேளனத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்பதற்கு முக்கிய உறுப்பினர்கள் ஆலோசனைகளை நடத்தியுள்ளனர்.

சம்மேளனத்துக்கு முன்னதாக இந்த விடயம் குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலகட்ட கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.

கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை உத்தியோகபூர்வமாக அறிவிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளதாக அக்கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (அ)

## தகுதியான தொண்டர் ஆசிரியர்கள் அனைவருக்கும் நிரந்தர நியமனம்

### அமைச்சர் டக்ளஸ் உறுதி



யாழ்ப்பாணம், செப். 14

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான கல்வி அமைச்சுக்களினால் நேர்முகப் பரீட்சைகள் நடத்தப் பட்டு தகுதியானவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து பொன்னாடை போர்த்தி நன்றியை தெரிவித்த நிலையிலேயே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நீண்ட காலமாக தொண்டர் ஆசிரியர்களாக சேவையாற்றுகின்றவர்களுக்கு, நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், அதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# யாழ். போதனா வைத்தியசாலையில் கைத்தொலைபேசி பாவனைக்கு தடை

யாழ்ப்பாணம், செப். 14

யாழ். போதனா வைத்தியசாலையில் கையடக்கத் தொலைபேசி பாவிக்க பணியாளர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடமை நேரத்தில் தாதியர்கள், சுகாதார ஊழியர்கள், பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் நோயாளர் பராமரிப்பில் ஈடுபட்டுள்ளவர்கள் கையடக்க தொலைபேசியை பாவிக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில், சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 08 வயதுச் சிறுமிக்கு இடது கை மாணிக்கட்டுடன் அகற்றப்பட்ட சம்பவம் அண்மையில் பதிவாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

தாதியர்கள் கவனக் குறைவினாலேயே சிறுமியின் கை அகற்றப்பட்டது என பல தரப்பினராலும் குற்றம் சாட்டப்பட்டு வரும் நிலையில் கடமையின்போது கையடக்கத் தொலைபேசி பாவிக்கத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.(அ)

## எரிபொருள்களின் விலை நாளாந்தம் மாற்றப்படும்?

கொழும்பு, செப். 14

எரிபொருள் விலையை நாளாந்தம் மாற்றும் முறைமையை அடுத்த வருடம் முதல் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபன விநியோகஸ்தர்கள் சங்கத்துடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சில் நடைபெற்ற இச்சந்திப்பில், எரிபொருள் விநியோகம் மற்றும் புதிய எரிபொருள் நிலையங்களின் எதிர்கால அபிவிருத்தி குறித்து கலந்துரையாடப்பட்டது.

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளை தானியங்கி கணினிமயமாக்கப்பட்ட இயக்க முறைமையில் தாக்கல் செய்வது குறித்து மேலும் விவாதிக்கப்பட்டுள்ளது. (அ)

# வர்த்தக கூடாரத்தை நாடா வெட்டி திறக்க 10 இலட்சம் ரூபாய் செலவு!

## வெளியான கணக்காய்வு அறிக்கையால் அதிர்ச்சி

கொழும்பு, செப். 14

சவூதி அரேபியாவில் நடைபெற்ற வர்த்தகக் கண்காட்சியில் இலங்கையின் வர்த்தக கூடாரத்தை திறப்பதற்கு பத்து இலட்சம் ரூபாவிற்கு மேல் செலவிட்டுள்ளதாக அண்மைய கணக்காய்வு அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

ரிபன்கள், கத்தரிக்கோல், மெழுகுவர்த்திகள் மற்றும் தட்டு வாங்குவதற்கு மாத்திரம் இந்த தொகையை இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் செலவிட்டுள்ளது.

அறிக்கையின்படி, இந்த வர்த்தக கண்காட்சி 2022 மே 09 முதல் 12 வரை நடைபெற்றது.

மேலும் 2021 டிசெம்பரில் அதன் செலவீனங்களுக்காக ஒன்பது கோடி ரூபாய் அங்கீகரிக்கப்பட்டது.

ஆனால் 2022 மார்ச் 29 அன்று 12 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டது.

இத்தொகை முதலில் 250 சதுர மீற்றர் இடத்துக்கு ஒதுக்கப்பட்டது. பின்னர் பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக 150 சதுர மீற்றராகக் குறைக்கப்பட்டது.

இடம் குறைக்கப்பட்டபோதிலும், அடிப்படைச் செலவைக் குறைப்பதற்குப் பதிலாக, கூடுதலாக 5,823,000 ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## கியூபா செல்லும் வழியில் டுபாயில் மம்தா பானர்ஜியை சந்தித்த ரணில்



கொழும்பு, செப். 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவின் மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜியை சந்தித்துள்ளார்.

ஐக்கிய அரபு அமீரகத்தின் டுபாயில் நேற்று காலை இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்த சந்திப்பின்போது மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மேற்கு வங்கத்துக்கு வருகை தருமாறு அழைப்பு விடுத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு முதலமைச்சர் மம்தா பானர்ஜி ஓவியம் ஒன்றையும் பரிசாக வழங்கியுள்ளார். (அ)

## கியூபா பறந்தார் ஜனாதிபதி ரணில்

கொழும்பு, செப். 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கியூபா மற்றும் அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று அதிகாலை பயணமானார்.

இம்மாதம் 15 ஆம் திகதி முதல் 16ஆம் திகதி வரை கியூபாவின் ஹவானாவில் நடைபெறவுள்ள "ஜி 77+ சீனா" அரச தலைவர் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அதேநேரம், எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை அமெரிக்காவில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 78ஆவது வருடாந்த அமர்வின் அரச தலைவர்கள் மாநாட்டிலும் ஜனாதிபதி கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

எமிரேட்ஸ் விமான சேவைக்கு சொந்தமான விமானம் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்று அதிகாலை 03.15 மணியளவில் டுபாய் நோக்கி ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினர் சென்றுள்ளனர்.

ஜனாதிபதி நாடு திரும்பும் வரை அவரின் கீழுள்ள அமைச்சுக்களுக்கு பதில் அமைச்சர்களும் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர். (அ)

## நாட்டில் 5 வீதத்தினருக்கு பிறப்பு சான்றிதழ் இல்லை

கொழும்பு, செப். 14

நாட்டின் மொத்த சனத்தொகையில் 5 சதவீதமானோர் பிறப்பு சான்றிதழ் இன்றி உள்ளனர் என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களுக்கான பிறப்பு சான்றிதழை பெற்றுக் கொள்வதற்காக எதிர்வரும் காலங்களில் விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தவுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்போது வரை, பிறப்பு சான்றிதழ் இல்லாதிருந்த சுமார் 14 ஆயிரம் பேருக்கு நடமாடும் சேவை ஊடாக பிறப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.09.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### ஆசிய கிண்ணக் கிரிக்கெட்:

# இலங்கை அணியை தோற்கடித்து இறுதிக்கு முன்னேறியது இந்தியா!



கொழும்பு, செப். 14

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சுப்பர் 4 சுற்றில் இலங்கை அணியை 41 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது இந்திய அணி.

கொழும்பில் உள்ள ஆர். பிரேமதாஸ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நேற்று முன்தினம் நடை பெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணி யின் தலைவர் ரோஹித் சர்மா துடுப்பாட்டத்தை தெரிவு செய்தார்.

ரோஹித் சர்மா, ஷுப்மன் கில் கூட்டணி அருமையான தொடக்கம் கொடுத்தது. 11 ஓவர்களில் 80 ஓட்டங்கள் சேர்க்கப்பட்ட நிலையில் இடது கை சுழற்பந்து வீச்சாளரான துனித் வெல்லலகே பந்தில் ஷுப்மன் கில் போல்ட் ஆனார். அவர், 25 பந்துகளில் 19 ஓட்டங்கள் சேர்த்தார். இதன் பின்னர் இந்திய அணி ஆட்டம் கண்டது. பாகிஸ்தானுக்கு எதிராக 122 ஓட்டங்களை குவித்த விராட் கோலி வெறும் 3 ஓட்டங்களில் வெல்லாலகே பந்தில் எளிதாக விக்கெட்டை பறிகொடுத்தார்.

தனது 51ஆவது அரை சதத்தை விளாசிய ரோஹித் சர்மா 48 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகளு டன் 53 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெல்லாலகே வீசிய மிக பதிவாக வந்த பந்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். இதன் பின்னர் இஷான் கிஷனுடன் இணைந்த கே. எல். ராகுல் இணைப்பாட்டத்தைக் கட்டமைக்க முயன்றார். 4ஆவது விக்கெட்டுக்கு 63 ஓட்டங்கள் சேர்க்கப்பட்ட நிலையில் இந்த ஜோடியை வெல்லாலகே பிரித்தார். கே.எல்.ராகுல் 44 பந்துகளில், 2 பௌண்ட்ரிகளுடன் 39 ஓட்டங்கள் எடுத்த நிலையில் வெல்லாலகே வீசிய பந்தில் அவரிடமே பிடி கொடுத்து வெளியேறினார்.

நிதானமாக துடுப்பெடுத்தாடிய இஷான் கிஷன் 61 பந்துகளில் ஒரு சிக்ஸர், ஒரு பௌண்ட்ரியுடன் 33 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சரித அசலங்க பந்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஹார்திக் பாண்ட்யா 5, ரவீந்திர ஜடேஜா 4, ஜஸ்பிரீத் பும்ரா 5, குல்தீப் யாதவ் 0 ஓட்டங்களில் நடையைக் கட்டினர். இறுதிக்கட்டத்தில் மட்டையை சுழற்ற முயன்ற அக்சர் பட்டேல் 36 பந்துகளில் ஒரு சிக்ஸருடன் 26 ஓட்டங்கள் எடுத்த நிலையில் தீக்ஷனவின் பந்தில் வெளியேற 49.1 ஓவரில் 213 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது இந்திய அணி. முகமது சிராஜ் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இலங்கை அணி சார்பில் துனித் வெல்லாலகே 10 ஓவர்களை வீசி ஒர் ஓட்டமற்ற ஓவருடன் 40 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்கள் வீழ்த்தினார். சரித அசலங்க 4 விக்கெட்களைக் கைப்பற்றினார். 214 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 25 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து தடுமாறியது. பதும் நிஷங்க 6, குஷால் மெண்டிஸ் 15 ஓட்டங்களில் பும்ரா பந்தில் ஆட்டமிழந்தனர். திமுத் கருணரத்ன 2 ஓட்டங்களில் முகமது சிராஜ் பந்தில் வெளியேறினார்.

சதீர சமரவிக்ரம 17, சரித அசலங்க 22 ஓட்டங்களில் குல்தீப் யாதவ் பந்திலும், அணித் தலைவர் தசுன் சானக 9 ஓட்டங்களில் ஜடேஜா பந்திலும் ஆட்டமிழந்தனர். 25.1 ஓவரில் 99 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்களை இழந்த நிலையில் தனஞ்சய டி சில்வா, துனித் வெல்லாலகே இணை இந்திய பந்து வீச்சாளர்களுக்கு அச்சுறுத்தல் கொடுத்தது. 63 ஓட்டங்கள் சேர்த்த இந்த இணையை ஜடேஜா பிரித்தார். தனஞ்சய டி சில்வா 66 பந்துகளில், 5 பௌண்ட்ரிகளுடன் 41 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஷுப்மன் கில்லிடம் பிடிகொடுத்து வெளியேறினார். அப்போது வெற்றிக்கு 12.1 ஓவரில் 52 ஓட்டங்கள் தேவையாக இருந்தது.

40ஆவது ஓவரை வீசிய ஜடேஜா தீக்ஷனவை ரன் அவுட் செய்ய கிடைத்த எளிதான வாய்ப்பை தவறவிட்டார். கடைசி 10 ஓவர்களில் இலங்கை அணியின் வெற்றிக்கு 44 ஓட்டங்கள் தேவையாக இருந்தது. ஹார்திக் பாண்ட்யா வீசிய அடுத்த ஓவரில் சூர்யகுமார் யாதவின் அற்புதமான பிடியெடுப்பால் தீக்ஷன (2) ஆட்டமிழக்க இலங்கை ரசிகர்கள் அதிர்ச்சியில் உறைந்தனர்.

இதைத் தொடர்ந்து ராஜித (1), மதிஷ பத்திரண (0) ஆகியோரை குல்தீப் யாதவ் ஆட்டமிழக்க செய்ய 41.3 ஓவர்களில் இலங்கை அணி 172 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது. துனித் வெல்லலகே 46 பந்துகளில், ஒரு சிக்ஸர், 3 பௌண்ட்ரிகளுடன் 42 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இந்திய அணி சார்பில் குல்தீப் யாதவ் 4 விக்கெட்களையும் ஜடேஜா, பும்ரா ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இந்திய அணி 4 புள்ளிகளுடன் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. சுப்பர் 4 சுற்றில் இந்திய அணி தனது கடைசி ஆட்டத்தில் 15ஆம் திகதி பங்களாதேஷுடன் மோதுகிறது.

இதேவேளை, இலங்கை அணி தனது கடைசி ஆட்டத்தில் இன்று பாகிஸ்தானை சந்திக்கிறது. (ஐ)

# ஆம்லாவின் சாதனையை முறியடித்தார் விராட்!



கொழும்பு, செப். 13

சர்வதேச ஒருநாள் போட்டியில் இதே மைதானத்தில் தொடர்ச்சியாக அதிக சதம் அடித்து இருந்த தென்னா பிரிக்க வீரர் ஹாசிம் ஆம்லாவின் சாதனையை விராட் கோலி சமன் செய்துள்ளார்.

16ஆவது ஆசியக் கிண்ணக் கிரிக்கெட்டில் தற்போது சுப்பர்4 சுற்று போட்டி கொழும்பில் நடக்கிறது.

இந்த தொடரில் சுப்பர் 4 சுற்றில் நேற்று முன்தினம் இந்தியா- பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் இந்திய அணி 50 ஓவர்களில் 2 விக்கெட்களை மட்டும் இழந்து 356 ஓட்டங்கள் குவித்தது. கோலி 122 ஓட்டங்கள், ராகுல் 111 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்காமல் இருந்தனர்.

இதையடுத்து 357 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற கடினமான இலக்குடன் ஆடிய பாகிஸ்தான் அணி 32 ஓவர்களில் 128 ஓட்டங்களுக்கு சுருண்டது.

இந்த ஆட்டத்தில் சதம் அடித்ததன் மூலம் தென்னாபிரிக்கா வீரர் ஹசிம் ஆம்லாவின் சாதனை ஒன்றை கோலி சமன் செய்துள்ளார்.

அதாவது கொழும்பு பிரேமதாஸ மைதானத்தில் கோலி தொடர்ச்சியாக 4ஆவது சதம் விளாசியுள்ளார். ஏற்கனவே இங்கு கடைசியாக ஆடிய 3 போட்டிகளிலும் சதம் (128 ஓட்டங்கள், 131 ஓட்டங்கள் மற்றும் 110 ஓட்டங்கள்) அடித்திருந்தார். இதன் மூலம் சர்வதேச ஒருநாள் போட்டியில் இதே மைதானத்தில் தொடர்ச் சியாக அதிக சதம் அடித்து இருந்த தென்னாபிரிக்க வீரர் ஹாசிம் ஆம்லாவின் சாதனையை விராட் கோலி சமன் செய்தார். (ஐ)

# வேகப்பந்து வீச்சாளர்கள் இருவர் பாகிஸ்தான் அணியில் சேர்ப்பு!

கொழும்பு, செப். 14

ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சுப்பர் 4 சுற்றில் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளரான ஹரிஸ் ரவூப் 5 ஓவர்களை மட்டுமே வீசிய நிலையில் அதன் பின்னர் களமிறங்கவில்லை.

அவருக்கு முதுகுப்பகுதியின் பக்கவாட்டில் காயம் ஏற்பட்டிருப்பதும் அந்த பகுதியில் வீக்கம் இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. அதேவேளையில் 10 ஓவர்கள் வீசிய நசீம் ஷா பீல்டிங்கின் போது காயம் அடைந்தார். தோள்பட்டையை பிடித்துக்கொண்டு வெளியே சென்ற அவர் துடுப்பெடுத்தாடவில்லை.

இந்நிலையில், இவர்களுக்கு மாற்று வீரர்களாக வேகப்பந்து வீச்சாளர்களான ஷாநவாஸ் தஹானி, ஷ மான் கான் ஆகியோர் பாகிஸ்தான் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர். அடுத்த மாதம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடருக்கு முன்னதாக வீரர்களின் உடல் தகுதியை கருத்தில் கொண்டு இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் அணி இன்றைய தினம் இலங்கை அணியை எதிர்கொள்கின்றது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)



# அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் ஜொகோவிச் சம்பியன்

நியூயோர்க், செப். 13

அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சேர்பியாவின் நோவக் ஜொகோவிச், ரஷ்யாவின் டேனியல் மெத்வதேவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். கிராண்ட் ஸ்லாம் தொடர்களில் ஜொகோவிச் வென்றுள்ள 24ஆவது பட்டம் இதுவாகும்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெற்று வந்த இந்த தொடரில் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி போட்டியில் நேற்று முன்தினம் இரவு 2ஆம் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச் 3ஆம் நிலை வீரரான ரஷ்யாவின் டேனியல் மெத்வதேவுடன் மோதினார். 3 மணி நேரம் 17 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஜொகோவிச் 6-3, 7-6 (7-5), 6-3 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்க ஓப்பனில் ஜொகோவிச் பட்டம் வெல்வது இது 4ஆவது முறையாகும். 36 வயதான அவர் கடந்த 2011, 2015, 2018ஆம் ஆண்டுகளிலும் கோப்பையை வென்றிருந்தார். மேலும் அமெரிக்க ஓப்பனில் அதிக வயதில் பட்டம் கைப்பற்றிய வீரர் என்ற பெருமையையும் ஜொகோவிச் பெற்றுள்ளார்.




ஒட்டுமொத்தமாக கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் ஜொகோவிச் கைப்பற்றியுள்ள 24ஆவது பட்டம் இதுவாகும். அவர், அவுஸ்திரேலிய ஓப்பனில் 10 முறையும் பிரெஞ்சு ஓப்பனில் 3 முறையும் விம்பிள்டனில் 7 முறையும் கிண்ணத்தையும் வென்று குவித்துள்ளார். (ஐ)

# இன்று 75 ஆவது அகவை காணும் மூத்த பத்திரிகையாளர் சலீம்



**வீரகத்தி தனபாலசிங்கம்**

அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலமாக பிராந்திய செய்தியாளர்களாக பணியாற்றிவருபவர்கள் என்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு இன்று சிலரே இருக்கிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் அதுவும் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் அத்தகைய நீண்டகால அனுபவமுடைய பத்திரிகையாளராக ஏ.எல்.எம். சலீம் அவர்களை குறிப்பிட முடியும்.

தொடர்ந்தும் துடிப்புடன் பணியாற்றிவரும் அவர் இன்று 75 ஆவது அகவையில் பிரவேசிக்கிறார். அவரை ஆரோக்கியத்துடன் நீடூழி வாழவும் ஊடகத்துறைக்கு மேலும் பயனுறுதியுடைய பங்களிப்பைச் செய்யவும் வாழ்த்துவோம்.

நிந்தவூரைச் சேர்ந்த சலீம் 1966 ஆம் ஆண்டு வீரகேசரியின் செய்தியாளராக பத்திரிகைத்துறையில் பிரவேசம் செய்தார். பிறகு சுதந்திரன், தினகரன், தினபதி, சிந்தாமணி, தினக்குரல் என்று பல பத்திரிகைகளின் பிராந்திய செய்தியாளராக பணியாற்றி தனது சேவையை விரிவுபடுத்தினார். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் உதயன் தினசரியின் அம்பாறை மாவட்டச் செய்தியாளராக அதன் தொடக்ககாலம் முதலிருந்தே சலீம் பணியாற்றிவருகிறார். இதனிடையே, அவரின் பணியின் தரம் கண்டு சில இலத்திரனியல் ஊடகங்களும் கூட அவரது சேவையை நாடின.

இலங்கையின் தமிழ்ப்பத்திரிகைத் துறையில் வளமான ஒரு மரபை விட்டுச் சென்ற புகழ்பூத்த பத்திரிகை ஆசிரியர்களான அமரர்கள் எஸ்.டி. சிவநாயகம், ஆர்.சிவகுருநாதன், கே.சிவப்பிரகாசம், ஆ.சிவனேசச்செல்வன், எஸ். நடராசா, கே.கே. இரத்தினசிங்கம், கானமயில்நாதன் ஆகியோரின் காலத்தில் அவர்களின் வழிநடத்தலில் பணியாற்றிய சலீம் இன்றைய இளம் பத்திரிகை ஆசிரியர்களின் காலத்திலும் பிராந்திய செய்தியாளராக தொடருகிறார்.

தகவல் தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சி காரணமாக பத்திரிகையாளர்களின் செயற்பாட்டு முறைகளில் நவீன கருவிகளைப் பயன்படுத்தி கடைப்பிடிக்கவேண்டியிருக்கும் மாற்றங்களுக்கு தன்னை இசைவாக்கிக் கொண்டு தங்கள் பணியை தொடர்ந்தும் செய்துவரும் தமிழ்பேசும் பத்திரிகையாளர்களில் சலீமும் ஒருவர் எனலாம்.

வெறுமனே பிராந்திய செய்திகளை மாத்திரம் அனுப்பும் ஒரு செய்தியாளராக மாத்திரமல்ல, அரசியல், சமூகப் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்த பெருவாரியான கட்டுரைகளையும் சலீம் எழுதிவந்திருக்கிறார். பத்திரிகையாளர்களுக்கு இருக்கவேண்டிய சமூகப்பபிரக்ஞையின் பால் மிகுந்த சிரத்தை காட்டி தனது பணிகளை சலீம் முன்னெடுத்து வந்திருக்கிறார்.

பிரதானமாக அம்பாறை மாவட்டத்தை தனது களமாகக் கொண்டு செயற்பட்டு வந்த போதிலும், ஊடகவிய லாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்க ளுக்காக குரல்கொடுக்கும் பல்வேறு அமைப்புக்களில் முக்கிய பங்கை வகித்த காரணத்தால் கிழக்கு மாகாணத்திற்கு அப்பால் வடமாகாணம், மலையகம் மற்றும் தலைநகர் கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் தமிழ்பேசும் ஊடகவியலாளர்கள் மத்தியில் மிகுந்த நட்புரிமை கொண்டவராக சலீம் விளங்குகிறார்.

முஸ்லிம் மீடியா ஃபோரம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகியவற்றின் தாபக உறுப்பினரான சலீம், கிழக்கிலங்கை செய்தியாளர்கள் சங்கம், அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனம், தென்கிழக்கிலங்கை செய்தியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்தார். 15 வருடங்களாக நிந்தவூர் மத்தியஸ்த சபையின் உறுப்பினராக இருந்துவரும் அவர் தற்போது நிந்தவூர் கலை இலக்கியப் பேரவையின் உப தலைவராக செயற்படுகின்றார்.



சலீமின் பத்திரிகைத்துறை சேவைக்காக அவர் பல்வேறு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கிறார். கலாபூசணம் விருது (2008), இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து வருடாந்தம் வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது (2017), கல்முனை மாநகர சபையின் ஊடக முதுசம் பட்டம் என்பவை அவருக்கு கிடைத்த மிகவும் குறிப்பிடத்தக்க விருதுகள்.

பத்திரிகைத்துறையில் சலீம் 50 வருடங்களைப் பூர்த்திசெய்ததை முன்னிட்டு சில வருடங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர்கள் சம்மேளனம் விமரிசையாகப் பெருவிழா எடுத்து அவரைக் கௌரவித்ததுடன் 'பொன் விழாக்காணும் சலீம்' என்ற சிறப்பு மலரையும் வெளியிட்டது. அந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றி அவரைக் கௌரவப்படுத்தும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

அந்த விழாவில் தமிழ்,முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பலரும் நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த ஊடகவியலாளர்களும் சமூகப்பிரமுகர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அது தனது பத்திரிகைத்துறை வாழ்வில் சலீம் செய்த பெறுமதியான பங்களிப்புகளுக்காக சமூகம் அவர் மீது கொண்டிருந்த அபிமானத்தின் சான்றாக அமைந்தது.

சலீம் போன்ற மிகவும் நீண்டகால பிராந்திய செய்தியாளர்களின் அனுபவங்கள் இன்றைய இளம் தலைமுறை ஊடகவியலார்களுக்கு முன்னுதாரணமாக அமையக்கூடியவை. இன்னும் மூன்று வருடங்களில் சலீமின் பத்திரிகைத்துறை வாழ்வு ஆறு தசாப்தங்களைப் பூர்த்தி செய்யும். இந்த நீண்டகால அனுபவங்களை அவர் எழுதி நூல் வடிவில் கொண்டுவரவேண்டும். இது அவரது 75 வது பிறந்த தினத்தில் நான் முன்வைக்கும் கோரிக்கையாகும்.

வடபகுதியில் இன்று இருக்கக்கூடிய மிகவும் மூத்த பிராந்திய பத்திரிகையாளரான வடமராட்சி புலோலி சி. தில்லைநாதனின் 73 வது பிறந்த தினத்தை முன்னிட்டு கடந்த ஜூனில் இதே கோரிக்கையை நான் முன்வைத்தேன்.

இலங்கையில் தமிழ்ப் பத்திரிகையாளர்களிடம் பெரும்பாலும் காணப்படும் ஒரு முக்கியமான குறைபாடு அவர்கள் தங்களது சேவைக்கால அனுபவங்களின் ஊடாக ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் அரசியல்,சமூக நிகழ்வுப்போக்குகளை வரலாற்றுப் பதிவாக எழுதுவதில் அக்கறை காட்டுவதில்லை என்பதாகும். எமது நண்பர் அமரர் வவுனியா மாணிக்கவாசகம் இதில் விதிவிலக்காக நடந்துகொண்ட மூத்த பத்திரிகையாளர்களுக்கு அண்மைய உதாரணமாகும்.

இன்றைய செய்தி நாளைய வரலாற்றின் அரை குறையான முதல் வரைவு என்று சொல்வார்கள். அதனால் தான் மூத்த ஊடகவியலாளர்களைப் பற்றி எழுதக்கிடைக்கும் சந்தர்ப்பங்களில் இந்த கோரிக்கையை முன்வைப்பதற்கு நான் தவறுவதில்லை.

இறுதியாக ஒரு தனிப்பட்ட குறிப்பு. எனக்கும் சலீமுக்கும் இடையிலான நட்பு கால் நூற்றாண்டுக்கும் அதிகமான நீட்சி கொண்டதாகும். கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தினக்குரல் பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதல் செய்தி ஆசிரியர் என்ற வகையில் நான் கிழக்கு மாகாணத்தின் பிரதேசங்களுக்கு செய்தியாளர்களைத் தேடிக்கொண்டிருந்த போது எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டவர்களில் திருகோணமலையின் மூத்த பத்திரிகையாளர் சின்னையா குருநாதனும் அம்பாறை மாவட்டத்தின் சலீமும் மட்டக்களப்பின் சண். தவராசாவும் முக்கியமானவர்கள்.

அவர்கள் தினக்குரலின் பிராந்தியச் செய்தியாளர்களாக பணியாற்ற முன்வந்ததுடன் மாத்திரம் நின்றுவிடவில்லை, பல்வேறு பகுதிகளில் செய்தியாளர்களாக நியமிக்கப்படக்கூடியவர்களுடன் எனக்கு தொடர்புகளை ஏற்படுத்தியும் தந்தார்கள். அவர்களது உதவிகள் விரிவான பிராந்தியச் செய்தியாளர்கள் கட்டமைப்பு ஒன்றை உருவாக்கி புதிய பத்திரிகையை குறுகிய காலத்திற்குள் பரந்தளவு வாசகர்கள் மத்தியில் கொண்டுசெல்ல எமக்கு உதவியது.

அது விடயத்தில் சலீமின் பங்களிப்பு என்றென்றைக்கும் மறக்க முடியாதது. முதலில் அவர் முழு அம்பாறை மாவட்டத்துக்குமான தினக்குரல் செய்தியாளராக இருந்துகொண்டு பின்னர் அந்த மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும் செய்தியாளர்களை தேடித்தந்தார். தினக்குரலின் ஆரம்பக் கட்ட வளர்ச்சியில் ஒரு பிராந்தியச் செய்தியாளர் என்ற வகையில் சலீமின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

நண்பர் சலீமுக்கு மீண்டும் பிறந்த நாள் வாழ்த்துக்களை கூறிக்கொண்டு அவரது பத்திரிகைத்துறைப் பணி தொடர வேண்டுகிறேன். மூத்த பத்திரிகையாளர்களை வாழும்போதே வாழ்த்துவோம்.

# ‘சனல் 4’ விவகாரம்: ராஜபக்ஷக்களின் அதிர்ஷ்டம்



சிவதாசன்

“சனல் 4 ராஜபக்சக்களுக்கு எதிராக வன்மத்துடன் செயற்படுகிறது” என்கின்றனர் ராஜபக்ச குடும்பத்தினர். “‘சனல் 4’ புலம் பெயர் தமிழர்களுக்கு ஆதரவாக இயங்குகிறது” என்கிறார் அமைச்சர் விஜேதாச ராஜபக்ச. “உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு சம்பவங்களுக்கு காரணமானவர்களைக் கண்டுபிடிக்க சர்வதேச விசாரணையொன்றை நடத்துவதற்கு இலங்கை தயார்” என்கிறார் ஜனாதிபதி விக்கிரமசிங்க. போதாததற்கு நாட்டை விட்டுத் தப்பியோடி மீள வந்த வாயில்லாப் பிராணி கோதாபயவையே வாய் திறக்க வைத்துவிட்டது ‘சனல் 4’. சூத்திரதாரி மஹிந்த அதிர்ஷ்டம் தன்னை நோக்கி ஓடிவருவதைப் பார்த்து எகத்தாளமாகச் சிரித்துக்கொண்டிருக்கலாம்.

உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு சம்பவங்கள் பற்றிய ‘சனல் 4’ நிகழ்ச்சி பலரது மனங்களையும் பிழிந்தெடுத்தது. பாதிக்கப்பட்டவர்களை வாட்டியெடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இறந்தவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும் நீதி வேண்டுமென்றே மறுக்கப்பட்டிருக்கிறது. எந்த ஆட்சியாளர் வந்தாலும் அது நடைபெறப் போவதில்லை. அது சிங்களத்தின் perpetual வெறி. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவேண்டுமென ‘சனல் 4’ போராடுகிறதா? எனக்கு அதில் சந்தேகம் உண்டு. ராஜபக்சக்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்பது அதன் நோக்கமா? இருக்கலாம். இறுதிப் போரில் தமிழர்களுக்கு அநீதியிழைத்தமை காரணமாக இருக்குமா? இருக்கலாம். அப்போ ‘சனல் 4’ இற்கு ஏனிந்த வஞ்சம்? ராஜபக்சக்கள் கெட்டவர்கள். அவர்கள் தமிழர்களுக்கு மட்டும் எதிரிகளல்ல. மானிடத்துக்குக்கே எதிரானவர்கள். கபடர்கள், திருடர்கள், கொலை அவர்களின் தொழில். அதனால் அவர்களை அரசியல் ரீதியாக நிர்மூலம் செய்ய வேண்டும். அதுவே தான் ‘சனல் 4’ இன் கொள்கையாக இருக்கலாம். நல்ல மனிதர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அவர்களும் இதையேதான் விரும்புவார்கள்.

‘Sri Lanka’s Easter Bombings – Channel 4 Dispatches’ என்ற தலைப்பில் செப்டம்பர் 5 ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சி பலரது கவனத்தையும் ஈர்த்தது எனினும் பலருக்கு அது ஆச்சரியத்தைக் கொடுக்கவில்லை. அசாத் மௌலானா என்பவரின் சாட்சியத்தைத் தவிர சாட்சியத்தில் சொல்லப்பட்ட விடயங்கள் உட்பட பெரும்பாலானவை ஏற்கெனவே கசிந்த விடயங்கள். அசாத் மௌலானா இவற்றை உறுதி செய்திருக்கிறார். இதனால் ‘சனல் 4’ இன் இந்த நிகழ்ச்சி எதிர்பார்த்த அதிர்ச்சியை அளிக்கவில்லை என விமர்சகர்கள் சிலர் கூறியிருக்கிறார்கள்.

அதற்காக ‘சனல் 4’ ஐ நாம் ஒதுக்கி விட முடியாது. தமிழருக்கு அது நிரம்ப உதவி செய்து வருகிறது. 14 ஜூன் 2011 இல் அது முள்ளிவாய்க்கால் இறுதிப் போர் தொடர்பாக ‘Sri Lanka’s Killing Fields’ என்றொரு விவரணப் படமொன்றை வெளியிட்டிருந்தது. பிரித்தானிய வரலாற்றிலேயே மிகவும் குரூரமான காட்சிகளைக் கொண்ட படமெனக் கூறப்பட்ட இவ்விவரணச் சித்திரம் தமிழரின் நீதிக்கான போராட்டத்தை உலகறியச் செய்தது மட்டுமல்ல அதன் நியாயத்தையும் வலியுறுத்தியிருந்தது. இதற்கு முன்னர் 1984 இல் கம்போடியாவின் கெமெர் ரூஜ் ஆட்சி நடைபெற்றபோது நடைபெற்ற கொடூரங்களை வர்ணிக்கும் திரைப்படமொன்று ‘The Killing Fields’ என்ற பெயரில் வந்து உலகின் மனச்சாட்சியைப் புரட்டிப் போட்டது. அதற்கடுத்த படியாக ‘Sri Lanka’s Killing Fields’ அதே நேர்மையான மனங்களில் அதே வகையான உணர்வுகளைக் கிளப்பியிருப்பினும் உலகம் தமிழருக்கான நீதியை மறுத்துவிட்டது. அப்படியிருந்தும் இவ்விவரணப் படம் ஐ.நா.மனித உரிமைகள் சபையின் 17 ஆவது அமர்வில் காட்டப்பட்டதுடன் அமெரிக்க காங்கிரஸ், மனித உரிமை அமைப்புகள், அவுஸ்திரேலியா, நியூசீலந்து எனப் பல இடங்களிலும் காட்டப்பட்டது. ஆனாலும் ‘The Killing Fields’ கம்போடிய கொடூரர்களுக்கு வாங்கிக் கொடுத்த தண்டனைகளின் அளவுக்கு ‘Sri Lanka’s Killing Fields’ இனால் எதையும் செய்ய முடியவில்லை. ‘Sri Lanka’s Easter Bombings’ பற்றிய விவரணச் சித்திரம் ‘Sri Lanka’s Killing Fields’ விவரணத்தின் ‘திருத்திய பதிப்பு’ எனக் கூறலாம். அதனால் தயாரிப்பாளர் எதிர்பார்த்த அந்த ‘அதிர்ச்சி’ கொஞ்சம் குறைவுதான்.



‘Sri Lanka’s Easter Bombings’ விவரணச் சித்திரம் வெளிவந்ததும் நண்பர் ஒருவர் அழைத்து “இதை நாம் குற்றவாளிகளை உலக நீதிமன்றங்களில் ஏற்றுவதற்கு இப்படத்தை நாம் வெற்றிகரமாகப் பயன்படுத்த வேண்டும்” என்றார். உண்மை தான். ஆனால் அதன் எதிர்வினை எப்படி இருக்கும் என்பதை நினைக்க - இது என் கருத்து மட்டுமே - கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது.

ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி ராஜபக்சக்களுக்கு அதிர்ஷ்டம் எப்போதும் அருகிலேயே இருந்து வந்திருக்கிறது. சுனாமி, இரட்டைக் கோபுரத் தாக்குதல், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் என்று அத்தனை அவலங்களையும் வளைத்துப் போட்டு பிணங்களின் மீது நின்று வெற்றிக் கூச்சல் போடுபவர்கள் அவர்கள். இன்னுமொரு அவலம் அவர்களுக்காகக் காத்திருக்கவில்லை என உறுதியாகக் கூறிவிட முடியாது.

‘Sri Lanka’s Easter Bombings’ எப்படி எதிர்வினையைத் தரலாமென நான் நினைப்பது இதுதான். துட்ட கெமுனு எல்லாளனைத் தோற்கடித்ததை இத்தனை நூற்றாண்டுகளாகக் கொண்டாடும் சிங்கள மக்கள் ‘மா வீரனென’ உலகம் அதிசயித்த பிரபாகரனை வென்ற ராஜபக்சக்களை இன்னும் பல நூற்றாண்டுகளுக்குக் கொண்டாடும் என்பதில் சந்தேகமில்லை. விடுதலைப் புலிகள் ‘வெற்றி கொள்ளப்பட முடியாத வீரப்படை’ எனத் தமிழர்கள் புளகாங்கிதமடைந்திருந்த நேரத்தில் அதையே மகிந்தவும் தென்னிலங்கையில் விதைத்திருந்தார். “இப்படியான ஒரு வீரப்படையை முறியடித்து நாட்டை மீளப்பெற்ற மகா வீரன் நான்” என அவர் தன்னையும் தன் குடும்பத்தினரையும் கூடவே தேசிய வீரர்களையும் மக்களின் மனங்களில் பச்சை குத்தி விட்டார். இவற்றை அகற்றுவது இலகுவான காரியமில்லை.

சிங்கள மக்களின் மனங்களில் இவ்வுணர்வுகள் தொடர்ந்தும் கொப்புளிக்கும் நிலையில் வைத்திருக்க வேண்டுமானால் சிங்கள மக்களுக்கு நிரந்தரமான எதிரியொன்று எப்போதும் இருந்துகொண்டே இருக்க வேண்டும். போர் முடிந்த பின்னர் சர்வதேசங்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மறுத்து ஏமாற்றியமைக்காக 2015 இல் ஒரு soft Aragalaya மூலம் சர்வதேசங்கள் ஆட்சி மாற்றத்தைக் கொண்டுவந்தன. அந்த நல்லாட்சி அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்ற உயிர்த்த ஞாயிறு படுகொலைகள் ராஜபக்சக்களுக்கு கைகொடுத்தன. இதில் இறந்தவர்கள் பௌத்தர்களாக இருக்கக்கூடாது என்பதில் ராஜபக்சக்கள் கவனமாக இருந்திருக்கிறார்கள். இனம், மொழி, மதம் என்ற கூரிய ஆயுதங்கள் எல்லோரிடமுண்டு என்பதை நாம் மறக்கலாகாது.

அப்போ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த வீராதி வீரன் கோதாபயவை சிங்கள மக்கள் விரட்டியடித்தார்கள் தானே என்கிறீர்கள். அங்கு தான் வித்தியாசம் இருக்கிறது. ராஜபக்சக்களை விரட்டி அடிப்பதானால் அது சிங்கள மக்களினால் மட்டுமே முடியும். அதுவே தான் யதார்த்தம். அவர்களை அகற்ற புறவிசைகளினால் ஒரு போதும் - வெளிப்படையாக - முடியாது. 2015 இல் முதன் முதலாக சிவில் சமூகங்களை நாடு முழுவதிலும் உருவாக்கி அவர்கள் மூலம் சர்வதேசம் ராஜபக்சக்களை அகற்றியது. இதில் எதிரி ‘வெளியிருந்து’ வரவில்லை. மக்களது வெறுப்பு ராஜபக்சக்கள் மீது திரும்பியது. 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் ஒரு புற எதிரியை அவர்களுக்கு காட்டியது. ராஜபக்சக்கள் ஆட்சியைக் கைப்பற்றினர்.

இரண்டாவது தடவையாக ‘அரகாலயா’ அவர்களை வீட்டுக்கு அனுப்பியது. இங்கும் புற எதிரியென ஒரு முகமும் காட்டப்படாமல் சர்வதேசம் கவனமாகக் கையாண்டது. மக்களின் வெறுப்பு ‘மகா வீரனை’ நாட்டை விட்டே துரத்தியது. அடுத்த மீள் வருகைக்காக அவர்கள் மந்திராலோசனை நடத்திக்கொண்டிருந்த வேளை உதவிக்கு வந்திருக்கிறது ‘சனல் 4’.

‘சனல் 4’ நிகழ்ச்சி ஒளிபரப்பாகியதைத் தொடர்ந்து அறிக்கைகளை விடுவதற்குப் பாய்ந்து வந்தவர்களைப் பாருங்கள். முதலில் நாமல் ராஜபக்ச பின்னர் ‘நாடோடி மன்னன்’ கோதாபய. வழக்கமாக மௌனம் காக்கும் கோதாபய இதில் முந்தள்ளப்பட்டிருக்கலாம். காரணம் அவர்தான் ‘தேசிய வீரர்’. விடுதலைப் புலிகளின் முதுகை உடைத்து நாட்டைக் காப்பாற்றிய கோதாபய மாவீரன் மீது எப்படி ‘சனல் 4’ அழுக்குகளை அள்ளி வீச முடியும்? போதாதற்கு விஜேதாச போன்ற பக்கவாத்தியக்காரர்கள் எல்லாம் நாங்களும் இருக்கிறோம் என்ற வகையில் சவுண்டுகளைக் கூட்டுகிறார்கள். ஜனாதிபதி தேர்தல் மூலையில் நிற்கிறது. சிங்கள மக்கள் கரங்களில் விரைவில் புத்த பிக்குகள் தாமரை மொட்டுகளைத் திணிக்கப் போகிறார்கள். இளவரசர் ராஜபக்சவுக்கு மஞ்சம் எங்கு இருக்கிறது என்று யாராவது பார்த்துச் சொல்லுங்கள்.

பாவம் ‘சனல் 4’. அது நல்லதை நினைத்தே செய்திருக்கிறது. ஐ.நா. மனித உரிமைகள் சபை கொடியேறுகிறது. திருவிழாவென்றால் சின்ன மேளம் ஒன்று அவசியம் தானே.

நண்பர் கூறியதைப் போல ‘சனல் 4’ கொண்டு ஓடிவந்த தடியை புலம் பெயர்ந்த தமிழர்கள் கொண்டோட வேண்டும் என்பதைக் கொஞ்சம் யோசித்து செய்யவேண்டும். அது ராஜபக்சக்களுக்கு நாம் கொடுக்கும் குளுகோஸாக இருந்துவிடக்கூடாது. முடிந்தால் இன்னுமொரு அரகலயா நல்லாகத்தானிருக்கும். எதற்கும் ஜூலி ச்சங்கிடம் கேட்டுச் செய்யுங்கள்.
(மறுமொழி)

# தந்தையை ஏமாற்றி பிள்ளையை கூட்டி வந்து கொலை செய்தேன்! மன்னார் அம்மம்மா அதிர்ச்சி வாக்குமூலம்

யாழ்ப்பாணம், செப். 14

திருநெல்வேலி பகுதியில் விடுதியிலிருந்து 12 வயதுச் சிறுமி சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தில், சிறுமியின் அம்மம்மா கொலைக் குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறுமி தனது அம்மம்மாவினால் நஞ்சூட்டிக் கொல்லப்பட்டமை உறுதியானதையடுத்து, 53 வயதான ஓய்வு பெற்ற மருத்துவமாதுவை நேற்று மாலை கோப்பாய் பொலிஸார் கைது செய்தனர்.

அவர் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார்.

திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தியிலுள்ள விடுதியொன்றில் நேற்று முன் தினம் சிறுமி பாத்திமா ஹிமாவின் சடலம் மீட்கப்பட்டது. அருகில் பாதிக்கப்பட்ட நிலையில் 53 வயதான நாகபூசணி சிவநாதன் ஆகிய அம்மம்மா காணப்பட்டார்.

சிறுமி திருகோணமலையில் தனது தந்தையுடன் வளர்ந்துள்ளார். அம்மம்மா மன்னாரை சேர்ந்தவர்..

அவர்கள், கடந்த 9ஆம் திகதி அந்த விடுதிக்கு வந்துள்ளனர். சிறுமிக்கு உளச்சிக்கல்கள் உள்ளதாகவும், அதற்கு நொதேர்ன் தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற வந்ததாகவும் விடுதியில் குறிப்பிட்டுள்ளார்.

மறுநாள் அவர் வெளியில் சென்று வந்தார். அதன் பின்னர் இருவரும் அறையை விட்டு வெளியில் வரவில்லை. இதனால் சந்தேகமடைந்த விடுதி பணியாளர்கள் நேற்று அறையை தட்டியும் சத்தம் வரவில்லை. இதையடுத்து அறையின் ஒரு பகுதியை உடைத்து பார்த்த போது இருவரும் படுக்கையில் அசைவற்றிருந்தனர்.

அவர்கள் உயிரிழந்து வட்டதாக விடுதி நிர்வாகத்தினர் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

கோப்பாய் பொலிஸார் அறையை உடைத்துச் சென்ற போது, சிறுமி உயிரிழந்திருந்தார். அவரது சடலம் பழுதடைந்திருந்தது.

அம்மம்மா குற்றுயிராக காணப்பட்டார். இதையடுத்து அவசர நோயாளர் காவு வண்டி அழைக்கப்பட்டு, அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். அவரை நோயாளர் காவுவண்டியில் ஏற்றியபோது, “என்னை எங்கு கொண்டு செல்கிறீர்கள்?“ என கேட்டார்.

பின்னர் நினைவிழந்ததை போல காணப்பட்டார். அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகிறார். தற்போது அவரது உடல் நிலை சாதாரண நிலைக்கு திரும்பி விட்டது. நேற்று மாலை அவரிடம் கோப்பாய் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்தனர்.

சிறுமியின் சடலம் இன்று உடற்கூராய்வுக்கு உட்படுத்தப்பட்டது. இதில், ஆபத்தை ஏற்படுத்தும் குறிப்பிட்ட வகை மருந்தொன்றை சிறுமிக்கு வழங்கி, கொல்லப்பட்டுள்ளது தெரிய வந்தது.

பரமேஸ்வரா சந்திக்கு அண்மையிலுள்ள விடுதிக்கு இருவரும் வந்த பின்னர், மறுநாள் அம்மம்மா மட்டும் வெளியில் சென்று வந்திருந்தார். அப்பொழுது, ஆபத்தை ஏற்படுத்தும்- விசேட சந்தர்ப்பங்களில் மட்டும் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட வகை மருந்தொன்றையும், தூக்க மாத்திரைகளையும் தனியார் மருந்தகமொன்றில் வாங்கியுள்ளார். சாதாரண பொதுமக்கள் அந்தவகை மருந்துகளை வாங்க முடியாது.

சிகிச்சை பெற்றுவரும் 53 வயதான அம்மம்மா, மருத்துவமாதாக மன்னாரில் பணியாற்றியவர். அவர் தனது பணி அட்டையை காண்பித்து, சிரமமின்றி மருந்துகளை மருந்தகங்களில் வாங்கலாம். அப்படியே, 10ஆம் திகதியும் ஆபத்தான மருந்துகளை வாங்கியுள்ளார்.

சிறுமிக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான தூக்க மாத்திரைகளை கொடுத்த பின்னர், ஆபத்தான மருந்தை செலுத்தியுள்ளார்.

பின்னர், சிறுமிக்கு கொடுத்த அளவை விட 3 மடங்கு தூக்க மாத்திரைகளை அருந்தி, தனக்கும் அந்த மருந்தை செலுத்தி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுள்ளார். சிறுமி உயிரிழந்தார். அம்மம்மா உயிர் பிழைத்திருந்தார்.

விடுதி அறைக்குள் அவர் எழுதிய தற்கொலை குறிப்பொன்றும்மீட்கப்பட்டது. அத்துடன், எழுதி கிழிக்கப்பட்ட பல கடிதங்கள் குப்பைக்கூடைக்குள் காணப்பட்டன. அவற்றில் சிலவற்றை சிறுமியும் எழுதியிருக்கலாமென கருதப்படுகிறது.

அத்துடன், சுத்தம் செய்ய பயன்படுத்தும் குறிப்பிட்ட வகை இரசாயன பொருளொன்றும் மீட்கப்பட்டது. அதனை எதற்காக கொள்வனவு செய்தார் என்பது இதுவரை தெரியவில்லை.

ஓய்வுபெற்ற மருத்துவமாதுவிடம் நேற்று மாலை கோப்பாய் பொலிஸார் வாக்குமூலம் பெற்றபோது, இந்த விவகாரத்தின் முழுமையான பின்னணி வெளியாகியுள்ளது.

மருத்துவமாதுவின் மகள் முஸ்லிம் நபர் ஒருவரை திருமணம் செய்துள்ளார். அவர்களுக்கே, உயிரிழந்த சிறுமி பிறந்துள்ளார். பின்னர் அந்த ஜோடி பிரிந்து விட்டது. மகள் வேறொரு திருமணம் செய்து கொண்டு விட்டார். மகளின் மகளை 2 வயது முதல் மருத்துவ மாதே மன்னாரில் வளர்த்து வந்துள்ளார்.

மகளின் கணவரும் திருகோணமலையில் மற்றொரு திருமணம் செய்து விட்டார். சில வருடங்களின் முன்னர், மகளை தான் வளர்க்கப் போவதாக குறிப்பிட்டு, திருகோணமலைக்கு அழைத்து சென்றுள்ளார். அவரது புதிய மனைவியும், சிறுமியுடன் அன்பாக இருந்ததாகவும், அங்கு சிறுமி நன்றாக வளர்க்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

சிறுமியை சிறுவயதிலிருந்தே வளர்த்த தன்னால், அவரை பிரிந்திருக்க முடியவில்லையென்றும், அவரது எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற பயமிருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தகவல்களால் 2 வருடங்களின் முன்னர், தற்போது பயன்படுத்திய வகை மருந்தை செலுத்தி தற்கொலைக்கு முயன்றுள்ளார். வைத்தியசாலையிலிருந்த அவர், 2 நாட்கள் கோமா நிலையிலிருந்து குணமடைந்துள்ளார்.

குடும்ப பிரிவு கவலைகளால் உயிர்வாழ விரும்பவில்லை என்றும், தான் இறந்த பின், சிறுமியின் எதிர்காலம் எப்படியிருக்குமோ என்ற அச்சத்தில், அவரையும் கொன்றுவிட்டு தற்கொலை செய்ய விரும்பியதாகவும் கூறியுள்ளார்.

கடந்த 2ஆம் திகதி திருகோணமலைக்கு சென்று, சிறுமியின் தந்தை, மனைவியிடம் பலவாறாக கெஞ்சிக் கேட்டு சிறுமியை அழைத்து வந்ததாக தெரிவித்துள்ளார். சிறுமியை யாழ்ப்பாணம் அழைத்து சென்று வைத்தியரிடம் காண்பித்து விட்டு, திருப்பி அழைத்து வருவதாக கூறியே, தந்தையிடமிருந்து அழைத்து வந்துள்ளார். (அ)

